பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 13, வியாழக்கிழமை 26.01.2017 | கதிர் 82

## முல்லைப் பயணத்தை கைவிட்டார் மைத்திரி

கொழும்பு, ஜன.26

முல்லைத்தீவுமுள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொள்வதற்காக முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலநிலை சீரின்மையால் முல்லைத்தீவுக்குச் செல்லாமல் இடைநடுவில் கொழும்புதிரும்பினார்.(ஓ)

### உண்ணாவிரதிகளுக்கு எதுவும் நேரலாம்

# விரைந்த நடவடிக்கை கோரி ஜனாதிபதிக்கு அவசரக் கடிதம்

## முதல்வர் விக்கி அனுப்பினார்

யாழ்ப்பாணம், ஜனவரி 26

**காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தண்ணீர், வெந்நீர் கூட அருந்தாமல் வவுனியாவில் ஆரம்பித்திருக்கும் உண்ணாவிரதம் நேற்று மூன்றாம் நாளைக் கடந்துள்ள சமயத்தில், இது தொடர்பில் அவசரக் கடிதம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேற்று அனுப்பிவைத்திருக்கின்றார்.**

**இந்த உண்ணாவிரதிகளுக்கு எதுவும் நேரும் ஆபத்துள்ளது. ஆகவே, அதனை நிறுத்தச் செய்வதற்கு ஏதாவது விரைந்து செய்யுங்கள் என்று ஜனாதிபதியை வற்புறுத்திக் கேட்டிருக்கின்றார் முதல்வர்.**

முதல்வரின் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

காணாமற்போனோர் மற்றும் சிறையில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் ஆகியோரின் உறவுகள் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உண்ணாவிரதம் மேற்

பக்கம் 20 »



## உண்ணாவிரதிகளின் நிலை மோசம்

வவுனியா, ஜன. 26

காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாகும் வரையிலான தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில்ஈடுபட்டுள்ளவர்களின் உடல் நிலை மோசமடைந்து வருகின்றது என வவுனியா பொது வைத்

பக்கம் 20 »

## 4 ஆம் நாள் உறுதியுடன் உண்ணாவிரதம்!

யாழ்ப்பாணம், ஜன.26

தமிழர்தாயகமான வடக்குமற்றும் கிழக்கில் யுத்தத்தின் போதும் அதற்குப் பின்னரும் கைதுசெய்யப்பட்டும் சரணடைந்த நிலையிலும் காணாமல் போகச் செய்யப்பட்ட தமது உறவுகளைத் தேடிக் கண்டறியும் குடும்பங்களைச் சேர்ந்தோர் நேற்று மூன்றாவது நாளாக வவுனியா ஏ9 வீதியிலுள்ள தபாலகத்திற்கு முன்பாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடும் மழையையும் குளிரையும் பொருட்படுத்தாது தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களில் பலரின் உடல் நிலை மோசமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்

பக்கம் 20 »

## காணாமற்போனவர்களில் பலரும் உயிருடன் இல்லை என்கிறார் பிரதமர்

வவுனியா, ஜன.26

காணாமல்போனோரில் பலர் உயிருடன் இல்லையென்றே தாம் நம்புகின்றார் எனவும் காணாமற்போனவர்கள் தொடர்பில் எந்தவொரு தகவலையும் இலங்கையில்தேடமுடியாதென பொலிஸார் அறிவித்துள்ளனர்

பக்கம் 20 »

## தெற்கிலிருந்து வருவோருக்கு நாவற்குழியில் வீடமைப்பா?

### எதிர்ப்போம் என சிவாஜி எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜன.26

நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானகாணியில்சிங்கள மக்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் நோக்குடன் அடிக்கல்நாட்டும்வைபவம்நடைபெற்றால், நிகழ்வுநடக்கும் இடத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம் என வடமாகாண ஆளும் கட்சி உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் எச்சரித்துள்ளார்.

"நாவற்குழியில்மானிய அடிப்படையில் வீடமைத்துக் கொடுப்

பக்கம் 19 »

## பொலிஸார் நேரில் விவரம் சேகரிப்பு



வவுனியா, ஜன. 26

உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்த பொலிஸார் உணவு

பக்கம் 20 »

### கரம்பனில் கர்ப்பிணிப் பெண் படுகொலை

## கைதான 2 சந்தேக நபர்களுக்கும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்,, ஜன.26

யாழ்.ஊர்காவற்றுறை கரம்பன்பகுதியில்7மாதகர்ப்பிணிப் பெண் ஞானசேகரம் ரம்சிகா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்க மறிய

பக்கம் 19 »

## மூளை சிதைவடைந்தமையே மரணத்திற்கான முக்கிய காரணம்

### வைத்திய பரிசோதனையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறைப்பகுதியில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட 7 மாதக் கர்ப்பிணிப் பெண்ணின் மரணம் தொடர்பான வைத்திய பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றுள்ளது. அது தொடர்பான அறிக்கையில் -

தலையின் பின்பகுதியில் பல

பக்கம் 19 »

## ஊழல் சுட்டியில் இலங்கையின் நிலைமை இன்னும் மிக மோசம்

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் ஊழல் அதிகரித்துள்ளதாக புதிய புள்ளி விவரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

டிரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் வெளியிட்டுள்ள,உலக ஊழல் தரவு பட்டியலுக்கு அமைய இந்தத்தகவல் வெளியாகி உள்ளது.

2015 ஆம் ஆண்டில் உலக ஊழல் தரவில் 168 நாடுகளுக்குள் இலங்கைக்கு 83 ஆவது இடம் கிடைத்துள்ளது. எனினும்

பக்கம் 19 »

## முஸ்லிம்கள் கைதாகினர் என்று வெளியான செய்தி தவறானது

யாழ்ப்பாணம், ஜன.26

"ஊர்காவற்றுறை - சுருவில் வீதியில், கரம்பன் பகுதியில் வீடொன்றில் தனிமையில் இருந்த ஏழு மாதக் கர்ப்பிணிப் பெண் கூரிய ஆயுதத்தால் வெட்டியும் அடித்தும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முஸ்லிம்கள் எவ

பக்கம் 19 »

## கனடா வாழ் ஈழத் தமிழர் லண்டனில் அடித்துக்கொலை



கொழும்பு, ஜன.26

கனடாவில் இருந்து சென்ற இலங்கைத்தமிழர் ஒருவர் பிரித்தானியாவின் கிரேட் லின்போர்ட் பகுதியில் அடித்துக் கொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்



அப்ப...ஊழலிலையும் முன்னைய ஆட்சியை நல்லாட்சி தோற்கடிக்கும் எண்டு சொல்லுங்கோ...!

# உண்ணாவிரதிகளுக்கு ஆதரவைக் காட்டுங்கள்!

*மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு*

இறுதிப்போரின்போதும்அதற்கு முன்பும் கைது செய்யப்பட்டும், கடத்தியும், காணாமல் போகச் செய்யப்பட்டோருக்குத் தெளிவான பதிலை அரசாங்கம் வழங்க வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியாவில்மேற்கொண்டுவரும்தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன்பொதுச்செயலாளர் சி.கா. செந்திவேல் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகள்விடுதலைசெய்யப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம்உடன்ரத்துசெய்யப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தமக்கு நியாயமான பதில் வழங்கப்பட வேண்டும்எனக்கோரி வவுனியாவில் காணாமல் போகச் செய்யப்பட்டோரின் பெற்றோர், மனைவிமார், பிள்ளைகள், உறவினர்கள் சாகும்வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இதற்கு ஜனநாயக மனித உரிமை விரும்பிகளும் அரசியல்சமூகப்பிரதிநிதிகளும், மக்களும் ஆதரவு வழங்கி வருகிறார்கள். நல்லாட்சியின் பெயரிலான இன்றைய அரசிடம் நீதி, நியாயம் கேட்டு நிற்கும் மேற்படி போராட்டத்தைப்புதியஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆதரித்து ஒத்துழைப்பையும்வழங்குகிறது.

கொடியபோர்முடிவுற்றுஏழரை ஆண்டுகள்கழிந்தும்காணாமல் போகச் செய்யப்பட்டோர் பற்றிய பதில் வழங்கப்படவில்லை. வடக்கு, கிழக்கு மக்களுக்குப்பல வாக்குறுதிகளை வழங்கிப் பதவிக்கு வந்த நல்லாட்சி அரசு இரண்டு வருட கால ஆட்சியில் தமது உறவுகளை இழந்து தவித்து நிற்கும் மக்களுக்கு எவ்விதபதிலும்வழங்காதுமௌனம் சாதித்து வருகிறது. காணாமற் போகச் செய்யப்பட்டோருக்கான அலுவலகம் திறக்கப்பட்டமை வெறும் கண் துடைப்புச்செயலே தவிர, நம்பிக்கை தரும் எவ்வித செயற்பாடும் முன்னெடுக்கப்படவில்லை. இந் நிலையில் தமது உறவுகள் எங்கிருக்கிறார்கள், உயிருடன்உள்ளனரா, எப்போது திரும்பிவருவார்கள் என்றஏக்கப் பெருமூச்சுடனும் கண்ணீர் கம்பலையுடனும் வாழ்ந்து வருவோரில் ஒரு பகுதியினரே கடந்த திங்கள் முதல் வவுனியா நகரில் சாகும் வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்றாவது நாளைக் கடந்துள்ள இப் போராட்டத்திற்கு அனைத்துமக்களும்ஆதரவாகவும், பக்கபலமாகவும் நிற்பது அவசியமாகும். தமிழகத்தின்ஜல்லிக்கட்டுத் தடைக்கு எதிராக தமிழக மக்களும், இளைஞர்களும் முன்னெடுத்த போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கு கொழும்பு பிரதேசங்களில் வீதியில் இறங்கிப் போராட்டக் குரல் எழுப்பிய தமிழ் இளைஞர்களும்மக்களும்காணாமற்போகச் செய்யப்பட்டோருக்குப் பதில் வேண்டியும், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டோரின் விடுதலைக்கும் வவுனியாவில் இடம்பெற்றுவரும் சாகும்வரையான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திற்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வலுச்சேர்க்க முன்வர வேண்டும் என எமது கட்சி வேண்டுகோள் விடுக்கிறது. – என்றுள்ளது. (உ)

# அரசின் கையாலாகாத்தனத்தின் விளைவே உறவுகளின் உண்ணாவிரதப் போராட்டம்

*மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் வண.செபமாலை அடிகளார் விவரிப்பு*




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமானது உண்ணாவிரதத்தில்ஈடுபட்டுள்ளவர்களின் விரக்தி நிலையையும் அரசினது கையாலாகாத தனத்தையுமே எடுத்துக்காட்டுகிறது என மன்னார் பிரஜைகள் குழுத்தலைவர் வணபிதாசெபமாலைஅடிகளார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டஉறவுகளின்உணவு தவிர்ப்புப்போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்–

கடந்த காலங்களில் யுத்தத்தின் போதும் யுத்தத்தின் பின்னரும் எமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இராணுவத்தின் கைகளில் கையளிக்கப்பட்டவர்கள், வீடுகளுக்குச் சென்று கைது செய்யப்பட்டவர்கள், வேலைக்குச் சென்றவர்கள் போன்றோர் காணாமல் ஆக்கப்பட்டார்கள். கடந்த ஏழரை ஆண்டுகளுக்கு மேலாக இந்த உறவுகள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளுக்கு மனுக்கள் கொடுத்தார்கள். ஐ.நா வரை மனுக்கள் கொடுக்கப்பட்ட போதும் இலங்கை அரசானது எந்தவிதமான சாத்வீகமான முன்னெடுப்புக்களையும் செய்யாத அதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைத் தெரியப்படுத்தவில்லை.

பல தாய்மார்கள், மனைவிமார்கள் இன்னும் தங்கள் பிள்ளைகளைத் தொலைத்த தந்தைமார்கள், தங்களுடைய விரக்தியின் விளிம்பிற்குச் சென்று 'எங்களுக்கு உண்மை வேண்டும்', 'ஜனாதிபதியே பதில் சொல்லுங்கள்', 'ஐ.நாவே தலையிடு' என்று கோரி கடந்த மூன்று நாள்களாகஉண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே அரசு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்றஉண்மையைச் சொல்லியே ஆகவேண்டும். ஆகவே இங்கு இருப்பவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். ஏற்கனவே தங்கள் பிள்ளைகள்மற்றும்கணவன்மாரைத் தொலைத்து விட்டார்கள். இன்னும்தங்கள்உயிரை அர்ப்பணித்து இந்த உண்ணாவிரதத்தில் இருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து நாட்டினுடைய ஜனாதிபதி, நாட்டினுடைய அதிகாரிகள்ஐ.நா.சபை மற்றும்மேற்குலக நாடுகள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

ஏற்கனவே ஏனைய நாடுகளில் தாய்மார்களின் அயராத போராட்டத்தினால் அவர்களுக்கு நீதிகிடைத்திருக்கின்றது. ஆகவே இலங்கைத் தேசத்திலும் கடந்த ஆண்டுகளாகப் போராடிப் போராடிக் களைத்து இறுதியில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திற்கு இவர்கள் சென்றிருப்பதானது இவர்களது விரக்தி நிலையையும் அரசினது கையாலாகாத தனத்தையும் எங்களுக்கு எடுத்துக்காட்டுகிறது.

இந்தப் போராட்டமானது 14 பேருடன் நிற்கப்போவதில்லை. இன்னும் ஆயிரக்கணக்கான தாய்மாரும் ஆயிரக்கணக்கான நலன்விரும்பிகளும், மக்களும் இதில் இணைந்துபோராட்டத்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அரசு உடனடியாக இதற்குத் தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும். அதற்குச் சாத்தியமான பதில்களைச் சொல்ல வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அமைக்கப்படவிருக்கின்ற அலுவலகம் கூட எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. உள்ளகப் பொறிமுறை விசாரணை எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆகவே இந்த மாயையான அரசு எங்களுக்கு ஒரு சரியான பதிலைக் கூற வேண்டும். பொய்களைக் கூறி ஏமாற்றாமல் இந்தத் தாய்மாரின் உயிரைக் காப்பாற்ற அரசு உரிய பதிலைத் தரவேண்டும். – என்றார்.

(ஒ-100)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு பதில் தேவை

*அரசு வழங்கவேண்டும் என்கிறார் சத்தியலிங்கம்*

இந்த நாட்டில் நடைபெற்று முடிந்த உள்நாட்டுப் போரின் போது பல சந்தர்ப்பங்களிலும் ஏராளமானோர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் உண்மை நிலைமை தொடர்பில் அவர்களது உறவினர்களுக்கு பதில் வழங்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உள்ளது. இந்த விடயத்திலிருந்து அரசாங்கம் எளிதில் விலகிவிடமுடியாதென வடக்குமாகாணசுகாதாரஅமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று முன்தினம்வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 30 வருடங்களாக தமிழர் தாயகத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பலகட்டங்களிலும் பெருமளவிலானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். போராட்டத்தில் ஈடுபாடு கொண்டவர்களும் சரி போராட்டத்தில் எந்தவித ஈடுபாடுகளும் கொண்டிராதவர்களும் பலவந்தமாக காணமல்செய்யப்பட்டுள்ளனர். உலக சட்டங்களை மீறி பல்வேறு தரப்பினரால் இவர்கள்பல சந்தர்ப்பங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் இதற்கான பொறுப்புக்கூறலில் இருந்து அவர்கள் தப்பிவிட முடியாது.

குறிப்பாக 2009 இறுதி யுத்தத்தின்போது அரசபடைகளின் வேண்டுகோளுக்கமைய அப்போதைய அரசாங்கத்தை நம்பி தங்கள் உறவுகளை ஒப்படைத்தனர். ஆனாலும் இன்றுவரை பலர் உறவினர்களிடம் மீள ஒப்படைக்கப்படவில்லை. எனவே அரசு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்னநடந்ததுஎன்பது தொடர்பில் உரிய விசாரணை நடத்தி உறவினர்களின் கேள்விகளுக்குபதில்வழங்கவேண்டும்.

தமதுஉறவுகளைதொலைத்த நாளிலிருந்துஇன்றுவரை அவர்கள் மீண்டுவருவார்கள் என்ற நம்பிக்கையுடன்தேடிஅலைந்து வருகிறார்கள். எத்தனைபோராட்டங்கள், எத்தனை சந்திப்புகள், எத்தனைவாக்குறுதிகள் அனைத்துமே அவர்களின் கேள்விக்கான பதிலை இன்று வரை வழங்கவில்லை. இதனால் நம்பிக்கை இழந்தே இவர்கள் இன்று தாமாக முன்வந்து தங்கள்உயிரையும் துச்சமென மதித்து சாகும் வரையான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர். இனியும் வேண்டாம் தாமதம் உரிய பதிலை அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டும். – என்றுள்ளது. (இ-81)

# உண்ணாவிரதத்தில் ஒன்றுபட்டு மீண்டும் ஐக்கியம் காட்டுவோம்!

*சிறி ரெலோ உதயராசா அழைப்பு*

கொழும்பு, ஜன.26

ஈழ விடுதலைப் போராட்டம் மூலம் சர்வதேசத்துக்கு ஈழத் தமிழரின் அவல நிலையை எடுத்துக்காட்டிய நாம் இன்று மீண்டும்ஒருமுறை இந்த உண்ணாவிரதத்தின்மூலம் எம்ஒற்றுமையையும், அவல நிலையையும் இலங்கையின் நல்லாட்சி அரசுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துகாட்டுவோம் என சிறி ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இப் போராட்டத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும்வகையில்புலம்பெயர் தமிழர்களும்போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இலங்கையில் யுத்தம் நடந்த காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரான காலங்களிலும் கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும், சரணடைந்தும் காணாமல்ஆக்கப்பட்டவர்களைத்தேடி பல கட்டங்களாகப் போராட்டங்களை மேற்கொண்டு எந்தப் பயனும் இல்லாமல் தங்களின் உயிரை மாய்த்தேனும் உறவுகளைமீட்கவெனவவுனியாவில் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் உறவுகளுக்கு சிறி ரெலோ கட்சி தனது பூரண ஆதரவினை வழங்குகின்றது. நம்மால் இயன்ற அளவுக்கு இது தொடர்பான அழுத்தங்களை அரசுக்கு வழங்கவும் தயாராகி வருகின்றோம் .

காணாமல்ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி பல போராட்டங்களை நடத்தி மனமுடைந்து உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கடுமையான பாதிப்புக்குள்ளான இவர்கள்நீராகாரம்இன்றி உண்ணாவிரதம் இருப் பது குறுகிய நாள்களில் பாரிய இழப்புக்களைஏற்படுத்திவிடும். இதைஉணர்ந்துஅரசும்காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் தொடர்பில் தீர்வினைப்பெற்றுத்தருவோம் எனக் கூறித் தேர்தல் வெற்றிகளைப் பெற்று அரசுக்கு ஆதரவுக்கரம் நீட்டி அரசுடன் நல்லுறவைப் பேணி வரும் தமிழ் பிரதிநிதிகளும், ஊடகங்களின் புகைப்படக் கருவிக்கு முன்பாக நின்று பேசுவதை விடுத்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு போராட்டத்தில் பங்குபற்றியுள்ள அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜல்லிக்கட்டுக்காக நாட்டின் பல பாகங்களிலும் திரண்டு போராடியது போன்று இந்தப் போராட்டத்துக்கும் ஆதரவு வழங்கி சகல இடங்களிலும் இளைஞர்களும் பொதுமக்களும்இந்தப்போராட்டத்தைஉலகறியச்செய்துஉரியவர்களுக்குப் போதிய அழுத்தத்தை வழங்க வேண்டும். இந்தப் போராட்டத்தைகாணாமலாக்கப்பட்டவர்களுக்கும், அரசியல் கைதிகளுக்கும்சரியானதீர்வைப்பெற்றுக் கொடுக்கக் கூடிய போராட்டமாக மாற்றியமைப்பதுதமிழர்கள் அனைவரது கைகளிலுமே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து செயற்பட அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.– என்றுள்ளது. (ஒ- 100)

# மரண அறிவித்தல்



## அமரர் E.S. பேரம்பலம் கணேசலிங்கம்

**(உரிமையாளர், E.S.P & Company, யாழ்ப்பாணம்; E.S.P & Company, கொழும்பு)**

**(அகில இலங்கை சமாதான நீதிவான், வணிகமாமணி, இறைபணி செம்மல், சிவதொண்டன்)**

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும், கொண்ட E.S. பேரம்பலம் கணேசலிங்கம் கடந்த 23.01.2017 திங்கட்கிழமை இரவு இந்தியாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற E.S. பேரம்பலம் (தொழிலதிபர், E.S.P & Company), காலஞ்சென்ற மாணிக்கம் தம்பதியரின் அருமைப் புதல்வனும் வேலுப்பிள்ளை கதிரவேலு, காலஞ்சென்ற கார்த்திகேயனி ஆகியோரின் அன்பு மருமகனும் சுமதி கணேசலிங்கத்தின் பாசமிகு கணவரும், அபிராமி, செந்தூரன், வைஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலாமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம், தங்க மலர், சண்முகராஜா, சுதாகரன், சுபாஸ்கரன்,சுபோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சைலா, அறிவழகன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், கஜேந்திரன், கஜமுகன், கமல நேசன், கமலநாதன், கமலரூபன் ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும், சண்முகநாதன், காலஞ் சென்ற சண்முகராசா, பவானி, சண்முகரட்ணம் (Aus),. சிவராசன், சிவகுமாரி, சிவரூபன், சிவகணேசன், நந்தினி, சாந்தகுமார், சிவகுமார், ராஜசுலோசினி, கலைமகள், வாசுகி, அச்சுதன், உமாசுதன், சங்கவி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆகாஷ், ஆர்த்தி ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 28.01.2017 சனிக்கிழமை வரை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று காலை 10.00 மணியளவில் பொரளை (கனத்தை) இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இல.11, பெதெஸ்டா வீதி, கொழும்பு. 05.
0771106323, 0776757178

**தகவல்: குடும்பத்தினர்**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தமிழ் ஊடகங்களின் செயற்போக்கு

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகத் துறையுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வில் உரையாற்றிய வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, ஊடகங்களின் போக்குத் தொடர்புடையனவாகச் சில விடயங்களைச் சுட்டிக் காட்டியிருக்கின்றார். சில நிலைமைகள் தொடர்பாக விசனத்துடன் கருத்து வெளியிட்டுமிருக்கின்றார்.

"இலங்கையின் மும்மொழி ஊடகங்களும் இனத்துவ ரீதியாகவே செயற்படுகின்றன. சிங்கள மொழி ஊடகங்கள் தொடர்ந்தும் சிங்கள இனவாதத்தையே கக்குகின்றன. தமிழ் மொழி ஊடகங்கள் தமிழின ரீதியான போக்கிலேயே செல்கின்றன. ஆங்கில மொழி ஊடகங்களும் இனத்துவ நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன." - என்று ஆதங்கத்துடன் சுட்டிக்காட்டியுமிருக்கின்றார் அவர்.

அவரது குற்றச்சாட்டுத் தவறு என்று சொல்லிவிட முடியாது. ஆனால், அந்த நிலைமைக்குக் காரணம், பொறுப்பு யார், எவ்வாறு இந்த நிலைமை ஏற்பட்டது என்பதே இன்று சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இங்கு நிலைகொண்டிருந்த தமிழ் ஊடகங்கள் எல்லாம், இலங்கை என்ற தேசிய சிந்தனையோடுதான் செயற்பட்டன.

அன்று, ஐக்கிய இலங்கைக்குள், தங்களது இனத்தின் தனித்துவத்தையும் விழுமியங்களையும் கைக் கொண்டபடி இலங்கையர்களாகவே தமிழர்கள் வாழ விரும்பினர். ஏன் இன்றும் கூட அந்தச் சிந்தனையோட்டம் அவர்களின் மனதில் இருந்து அகன்றுவிட்டதாகக் கூறமுடியாது.

ஆனால், தமிழர்கள் தங்களின் இனத்துவம் குறித்து விசேடமாகவும் தீவிரமாகவும் சிந்திக்கத் தலைப்படவும், அந்த வழியில் செயற்படவும் வைத்தது எது? தமிழரை அந்த வழியில் நெட்டித் தள்ளி, அதன் வழி பயணிக்கத் தூண்டியது எது?

அந்த வழியைத் தமிழர்கள் தேர்ந்தெடுத்த பின்னர், அப்பாதையில் பயணிப்பதைத் தவிர வேறு மார்க்கம் தமிழ் ஊடகங்களுக்கு இருக்கவில்லை. அதுதான் உண்மை.

அன்றைய நிலையில் தமிழ் மக்கள் தமது இனத் தனித்துவத்தையும், தங்களின் இருப்பையும், கௌரவத்துடன் கூடிய வாழ்வையும், இவற்றுக்கு மேலாகத் தங்கள் சந்ததியையும் காப்பாற்றுவதற்காக இனத்துவ ரீதியாகச் சிந்திக்க வேண்டிய கட்டாயம் - வரலாற்று நெருக்கடி - அவர்கள் மீது மீளவே முடியாத அழுத்தமாகச் சுமத்தப்பட்டது.

அப்படி முழுத் தமிழினமுமே சிந்திக்கத் தலைப்பட்ட வேளையில், அந்த வழியில் பயணிப்பதே தமிழ் ஊடகங்களின் கடப்பாடாகவும் பொறுப்பாகவும் இருந்தது.

சரி, பிழை எதுவாகவும் இருக்கலாம். நீதி வேண்டி, நியாயம் கேட்டு, கௌரவமான - சமத்துவமான - வாழ்வு தேடி இலங்கைத் தமிழர்கள் நடத்திய அஹிம்சைப் போராட்டங்கள் மூன்று தசாப்த காலத்தைக் கடந்து, ஆயுத வழிக்குத் திரும்பியது. பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் கழுத்தில் சயனைட் கட்டி, கையில் சுடுகலங்கள் தாங்கி, வாழ்வா சாவாப் போராட்டம் நடத்துகின்ற ஒரு நிலையில் ஊடகங்களுக்கு- தமிழ் ஊடகங்களுக்கு- அதுவும் அந்தப் போராட்டம் உக்கிரம் பெற்றிருந்த தமிழ் மண்ணில் இருந்து முகிழ்ந்த ஊடகங்களுக்கு இருந்த வரலாற்றுப் பொறுப்பைக் கையிலெடுத்துச் செயற்படுவதை தவிர வேறு மார்க்கம் இருக்கவேயில்லை.

ஆயுதப் போராட்டம் இன்று தோற்றுப் போயிருக்கலாம். அதை வழி நடத்திய தரப்புக்கள்- தலைமைகள்- கூடத் தவறிழைத்திருக்கலாம். ஆனால் அதற்குள் புதைந்து கிடக்கும் சரித்திரச் சாதனைகள், நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஈகங்கள், சொல்லில் வர்ணித்து விட முடியாத அன்றைய தியாகங்கள், அந்தப் போராட்டத்துக்காகச் சுமந்த வலிகள், சோகங்கள், இனத்தின் நலன் மீதான வாஞ்சை எல்லாம் மிக உச்சமானவை.

அப்படிப்பட்ட போராட்டக் களத்துக்கு மத்தியில் ஊடகங்களுக்கு இருந்த பொறுப்பும், கடப்பாடும் வேறானவை. அந்தச் சூழலைப் புரிந்துகொள்வது அவசியம்.

அத்தகைய போராட்டம் இன்று தோற்றுப் போயிருக்கலாம். அப்படித் தோற்கலாம் என்ற தீர்க்கதரிசனமாக உணர்ந்த ஊடகங்களுக்கு கூட அந்தப் பாதையில் இருந்து விலகிச் செயற்படக் கூடிய மார்க்கமும் நியாயமும் கூட இருக்கவில்லை.

இலங்கையைக் கடந்த ஏழு தசாப்தங்களாகத் தொடர்ந்து ஆண்டு வந்த அரசுகளின் முழு ஆசியுடனும் ஆசீர்வாதத்துடனும் பௌத்த சிங்களப் பேரினவாதம் சிறுபான்மை இனமான தமிழ் பேசும் மக்கள் மீது வலோற்காரமாகச் செலுத்திய- நீதி முறை அற்ற- அநியாயமான- மேலாதிக்கத்தின் விளைவே தமிழினத்தின் உரிமைப் போரும், அதன் வழி செயற்பட வேண்டிய தமிழ் ஊடகங்களின் கடப்பாடாகவும் அமைந்தன.

இந்தப் பேரினவாத மேலாதிக்கச் சிந்தனையில் இருந்து தென்னிலங்கை அரசோ, இவ்விடயத்தில் அதனுடன் இயைந்து செயற்படும் தென்னிலங்கை ஊடகங்களோ அதில் இருந்து விடுபட்டுச் செயற்படப்போவதில்லை. அப்படிச் செயற்படாதவரை தமிழ் ஊடகங்களும் தமது இனத்தைத் தக்க வைக்கும் முயற்சிக்கே முக்கியத்தும் கொடுக்க வேண்டிய தேவை தொடரவே செய்யும். அதனால் அவையும் இனவாதப் போக்கிலேயே செயற்படும் கட்டாயம் நீடிக்கும். இனவாதப் போக்கைக் கடந்து, ஐக்கிய இலங்கைக்குள் சிறுபான்மையினருக்கும் நீதி செய்யும் நியாயப் பண்பியல்புக்கு தென்னிலங்கை அரசும், மக்களும், ஊடகங்களும் இறங்கி வரும் வரை, தமிழ் ஊடகங்களும் இனத்துவப் போக்கில் செயற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். அதனைத் தவறு என்று எப்படிச் சொல்வது...?




## 2,753 உளவியல் ஆசிரியர்களை பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை

### கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.26

உளவியல் ஆலோசனை தொடர்பில் புதிதாக 2 ஆயிரத்து 753 ஆசிரியர்களைக் கல்விக் கட்டமைப்புக்குள் ஈடுபடுத்துமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அதிகாரிகளுக்கு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

உளவியல் ஆலோசனை தொடர்பில் முறையான பயிற்சியைக் கொண்ட ஆசிரியர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளும் பணிகளைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை அவர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''தற்போதைய சமூகங்கள் மத்தியில் பாடசாலை மாணவர்கள் பல்வேறு உளவியல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக அவர்களது கல்வி மற்றும் சமூகச் செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

''இவற்றைக் கருத்திற் கொண்டு பாடசாலைகளில் சிறந்த தொடர்பாடல்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

''இதற்கமைய மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்காக ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். இவ்வாறாக 3 ஆயிரத்து 768 பாடசாலைகள் காணப்படுகின்றன.

''தற்போது 1039 ஆசிரியர்கள் உளவியல் ஆசிரியர்களாகச் சேவையில் தற்காலிகப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தகுதிகளைப் பூர்த்தி செய்த பின்னர் உளவியல் ஆலோசகர்களாக நியமிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.''- என்றார். (எ)

## பல்கலை கல்விசாரா ஊழியர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டத்துக்கு முஸ்தீபு

கொழும்பு, ஜன.26

மேலதிக கொடுப்பனவை அதிகரிக்கும் சுற்றறிக்கை இதுவரை வெளியிடப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக் கழகங்களிலுள்ள சுமார் 14 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் மீண்டும் ஆர்ப்பாட்டத்துக்கு தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் முதல் அதிகரித்துத் தருவதாக வழங்கப்பட்ட வாக்குறுதியை மீறும் விதமாக அரசு செயற்பட்டு வருகின்றது என்றும் ஊழியர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அரசு இவ்வாறு செயற்பட்டால், அதற்கு எதிராக நடத்தப்படும் போராட்டம் தொடர்பில் தீர்மானிப்பதற்கு எதிர்வரும் 31 ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழகத் தொழிற்சங்கங்களும் கூடிக் கலந்துரையாடவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வழங்கப்படும் சம்பளத்தின் 20 வீதமான மேலதிக கொடுப்பனவை அதிகரித்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ஓகஸ்ட் 8 ஆம் திகதி அரசின் வாக்குறுதிகளை அடுத்து கைவிடப்பட்டது எனவும் அந்தச் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

## விலை அதிகரிப்பை அடுத்து லொத்தர் சீட்டு விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, ஜன.26

அதிஷ்ட இலாபச் சீட்டுக்களின் (லொத்தர்) விலை 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமையால், அதன் விற்பனையும் குறைவடைந்துள்ளதாக, லொத்தர் விற்பனை முகவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இலங்கையில் அதிஷ்ட இலாபச் சீட்டுக்களுக்கான விலை 30 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டது.

எனினும், இதற்கு எதிராக லொத்தர் விற்பனை முகவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை அடுத்து, முன்னைய விலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று ஜனாதிபதியால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

எனினும், அதனை அதிகாரிகள் கருத்தில் கொள்ளாமை கவலையளிப்பதாக, லொத்தர் விற்பனை முகவர்கள் சங்கத்தின் அமைப்பாளர் அமில தியூணுகே குறிப்பிட்டுள்ளார். (எ)

## வீரவன்ஸவின் ஆதரவாளரும் விளக்க மறியலில்!

கொழும்பு, ஜன.26

விமல் வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது நீதிமன்றத்துக்குள் சத்தமிட்டுக் கோஷமிட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவரை பெப்ரவரி 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் லங்கா ஜயரட்ண உத்தரவிட்டார். (உ)

## நாளை

27.01.2017
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ. 10.55வரை
திதி: அமாவாசை முழுவதும்
சுபநேரம் : 06.38 – 08.06 வரை
இராகுகாலம் : 11.06 – 12.36 வரை

# அரசின் நடவடிக்கைகளைச் சகித்து வருகிறார் சம்பந்தன்; ஆனால் தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடு அதுவல்ல!

## ஆட்சியாளர்கள் இதனை உணர வேண்டும் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்



## வவுனியாவில் சாகும்வரையான உண்ணாவிரதம் இருப்பவர்கள் குறித்தும் சபையில் பிரஸ்தாபம்

கொழும்பு,ஜன.26

புதிய அரசின் நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சம்பந்தன் ஐயா சகித்துக் கொண்டிருக்கிறார். அதற்காக அரசின் நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்தையும் சகித்துக் கொண்டிருக்கும் என்று ஆட்சியாளர்கள் நினைக்கக் கூடாது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது கூறினார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தின் போது சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட, கைது செய்யப்பட்ட, சரணடைந்த தமது உறவுகள் இருக்கின்றனரா? இல்லையா? என்பதை வெளிப்படையாக அரசாங்கம் அறிவிக்க வேண்டும் எனக் கோரி காணாமல் போன உறவுகள் வவுனியாவில் சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் பலர் பெண்கள், வயோதிபர்களாக உள்ளனர்.

ஆட்சி மாறிவிட்டது. தற்போதைய தேசிய அரசு புதியது. ஜனாதிபதி, பிரதமர் இராணுவ தளபதி ஆகியோர் புதியவர்கள். எனவே இவர்களுக்கு காணாமற்போன உறவுகள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பது தொடர்பில் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. இவர்கள் இது தொடர்பாக பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும். தற்போதைய ஆட்சியாளர்களுக்கு காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது நன்றாகவே தெரியும்.

ஆகக்குறைந்தது காணாமற்போன உறவுகள் உயிருடன் இருந்தால் இருக்கின்றனர். இல்லையென்றால் கடந்த அரசால் அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டனர் என்றாவது கூறமுடியுமல்லவா?.

இந்த விடயத்தில் தொடர்ந்தும் எமது மக்களை ஏமாற்றிக் கொண்டும் புதிய புதிய கதைகளைக் கூறி காலந்தாழ்த்திக் கொண்டும் இருக்க வேண்டாம். தமது காணாமற்போன உறவுகளை கடந்த 8 வருடங்களாக எத்தனையோ இடங்களில் தொடர்ச்சியாக தேடி அலைந்து கொண்டிருக்கின்றனர். அரசு நியமித்த ஆணைக்குழுக்கள் உட்பட 12 இற்கு மேற்பட்ட தரப்புக்களிடத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர். அவை அனைத்துமே வெறும் ஆவணங்களாகவே இருக்கின்றன. ஆனால் காணாமற்போனவர்கள் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

### சகித்துக் கொள்ளும் சம்பந்தன் ஐயா

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சம்பந்தன் சகித்துக் கொண்டிருக்கின்றார் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்தையும் சகித்துக் கொண்டே இருக்கும் என தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஆட்சியாளர்கள் நினைக்கக் கூடாது.

தற்போது காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அவ்வாறு உண்ணாவிரதமிருக்கும் காணாமற் போனோரின் உறவுகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமாயின் தேசிய அரசின் முற்போக்கான செயற்பாடுகளுக்கு வழங்கிவரும் ஆதரவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலக்கி கொள்ள நேரிடும். எனவே, உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுவருவோருக்கு உரிய தீர்வை வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதேவேளை மத்திய வங்கி பிணை முறிகள் விநியோகம் தொடர்பான சர்ச்சை குறித்து விசாரணைகளை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தலைமையிலான கோப் குழு நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

### கோப் குழு அறிக்கை: நடவடிக்கை தேவை

அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களின் பிரகாரம் உரிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இவ்வாறு எத்தனையோ அறிக்கைகள் வெளிவந்திருக்கின்றபோதும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

அவ்வாறான நிலையில் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதாக கூறி மக்களின் ஆணையைப் பெற்ற தேசிய அரசாங்கம் குறித்த விடயத்தை இருட்டடிப்புச் செய்யாது முழுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும்.

தற்போது ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று இந்த விடயத்தை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்திலும் ஆணைக்குழுக்கள் நியமிக்கப் பட்டன. ஆனால் அவற்றின் பரிந்துரைகள் வெறுமனே அறிக்கைகளாகவே இருக்கின்றன. ஆகவே, அவ்வாறில்லாது நேர்த்தியான நடவடிக்கைகளை எடுத்து பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் செயற்பாடுகளை தேசிய அரசாங்கமாவது மேற்கொள்ள வேண்டும் - என்றார். (இ)







## கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியேற்பில் அமைச்சர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன.26


நெடுந்தீவு பிரதேச செயலக கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான நியமனம் வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். குருநகரில் அமைந்துள்ள மாகாண வீதி அபிவிருத்திதிணைக்கள மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற அமைச்சரவை ஆலோசனைக் குழுக் கூட்டத்தைச் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது, இந்த நிகழ்வில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்-

தற்போது நியமனம் பெறும் உத்தியோகத்தர் அங்குள்ள மக்களது நலனில் மிகுந்த அக்கறையுள்ளவராகவும், எப்போதும் அவர்களது தேவைகளை அறிந்து சிறப்பாகத் தனது கடமையை மேற்கொள்பவராகவும் திறமையுடன் செயற்பட வேண்டும்- என்றார். நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் கே. விந்தனும் கலந்துகொண்டார். (இ)



## குடியிருப்புக்குள் புகுந்த காட்டு யானைகள்!



மட்டக்களப்பு,ஜன.26

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியிலுள்ள மக்கள் குடியிருப்பு பகுதியில் மின்சார வேலியை உடைத்து குடியிருப்புப் பகுதிக்குள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு யானைகள் புகுந்துள்ளன.


இந்தப் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக யானை பாதுகாப்புக்காக மின்சாரவேலி அமைக்கப்பட்டு, பராமரிக்கும் வேலையில் வன ஜீவராசிகள்அதிகாரிகள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இரவு வேளையில் பாதுகாப்பு மின்சார வேலியை உடைத்து குடியிருப்புக்குள் உட்புகுந்த யானைகள் அங்குள்ள வேளாண்மைப் பயிர்களை துவம்சம் செய்துள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

# பிரதேச சபையின் நடவடிக்கைகளை முடக்கி வாழைச்சேனையில் கவனவீர்ப்பு பேரணி!

## நிறுத்தப்பட்ட சந்தைக் கட்டட வேலையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி





வாழைச்சேனை,ஜன.26

வாழைச்சேனை பிரதேச சபையால் நிறுத்தப்பட்டுள்ள சந்தைக் கட்டட வேலையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தி, அந்தப் பிரதேச மக்களால் பிரதேச சபையின் இரு பக்க கதவையும் மூடி உள்ளே ஊழியர்களைச் செல்ல விடாமலும், உள்ளிருந்தவர்களை வெளியே வர விடாமலும் சபை நடவடிக்கையை இடைநிறுத்தி கவன வீர்ப்பு போராட்டத்தில் நேற்று புதன்கிழமை ஈடுபட்டனர்.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, 'பிரதேச சபைச் செயலாளரே சந்தைக் கட்டடத் தொகுதி வேலைகளை நிறுத்தியமையின் பின்னணி என்ன?,' 'பிரதேச சபைக் காணி பிரதேச சபைக்கே சொந்தம்: அதை யாரும் உரிமை கோர முடியாது,' '75 வருடங்களுக்கு முற்பட்ட பிரதேச சபை காணியின் உரிமையை யாரும் மறுக்க முடியாது' போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை இளைஞர், யுவதிகள் ஏந்தியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச சபை செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன் தெரிவிக்கையில்:-

1967 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை பிரதேச சபை இருந்த காணியைப் பிரதேச சபையே பராமரித்து வருகிறது. கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற கலவரத்தின் போது இந்த இடத்தில் இருந்த பிரதேச சபைக் கட்டடம் தீக்கிரையாக்கப்பட்டது.

அதன் பின்னர் பிரதேச சபை தமிழ், முஸ்லிம் வியாபாரிகளின் அங்காடி வியாபார நடவடிக்கைக்காக வாடகை அடிப்படையில் இடத்தை வழங்கி வந்தது. பின்னர் அந்த இடத்தில் ஆறு வியாபாரிகளுக்கு கடை கட்டப்பட்டு வந்த நிலையில், தனிநபர் ஒருவர் இந்தக் காணி தனக்குச் சொந்தம் எனக்கோரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை அடுத்து கடைகட்டும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், வியாழேந்திரன் ஆகியோர் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பலவாறாக எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், சட்ட ஆலோசனைகள் மற்றும் மேல் மட்டத்தில் இருந்து கிடைக்கும் ஒத்துழைப்புடன் கடை மீண்டும் கட்டப்படும். - என்றார்.

பிரதேச சபை செயலாளர் தெரிவித்த கருத்தைத் தொடர்ந்து பிரதேச சபையின் இரு பக்க கதவுகளையும் திறந்து விட்டு, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். இதனை அடுத்து இடைநிறுத்தப்பட்டிருந்த பிரதேச சபை நடவடிக்கைகள் பத்து மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன. (ச)

### பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சையின்

# வெட்டுப்புள்ளி குறைப்பு பிரேரணைக்கு கிழக்கு மாகாணசபை அமர்வில் ஆதரவு!

திருகோணமலை,ஜன.26

கிழக்கு மாகாணசபையின் பொதுச்சேவை ஆணைக்குழுவால் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் வெட்டுப்புள்ளியைக் குறைக்கக் கோரி, கிழக்கு மாகாணசபை அமர்வில் மாகாணசபை உறுப்பினர்களான இரா.துரைரெட்ணம், அன்வர் ஆகிய இருவராலும் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு சபையில் ஆதரவு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாணசபை அமர்வில் கலந்த கொண்ட மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கருத்துத் தெரிவிக்கையில்:-

முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக, புள்ளிகளைக் குறைப்பதற்கு சபையில் ஆதரவு வழங்கப்பட்டுள்ளதுடன், மேலதிகமாகப் பல விடயங்கள் சேர்ந்துக் கொள்ளப்பட வேண்டும் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும், இதற்கென குழுவொன்றை அமைத்து, அந்தக் குழுவின் சிபாரிசைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த அமர்வில் முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் கலந்துகொள்ளாத நிலையில், அவர்களுடனும் இதுதொடர்பிடல் கலந்துரையாடல் நடத்தி, அமைக்கப்படும் குழுவின் சிபாரிசைச் சபையின் அவைத்தலைவர் ஊடாக பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கும், ஆளுநருக்கும் அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.-என்றார். (ச)

# மீனவப் படகு கவிழ்ந்ததில் இருவர் சாவு; ஒருவர் மீட்பு!

## உயிரிழந்தவர்கள் சகோதரர்கள்

மட்டக்களப்பு முகத்துவாரம் கடற் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களின் படகு ஒன்று கவிழ்ந்ததில் மீனவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் மீட்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் திராய்மடு 8 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சகோதரர்களான துரைமணி வசந்தன் (வயது-26) துரைமணி செல்வா (வயது-18) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இந்தப் படகில் மீன் பிடிக்க மூவர் சென்றிருந்த நிலையில், இருவரது சடலங்கள் கடலாட்சி அம்மன் கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டன. இதேவேளை, இந்தப் படகில் சென்ற நாவலடிப் பிரதேசத்தைச் சேர்ந்த மற்றுமொரு மீனவர், ஏனைய மீனவர்களால் காப்பாற்றப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


## மணமக்கள்

☎0114320017- 8

அலுவலக நேரம்
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 5800 \| க<br>1981 \| பாஷையூர்<br>Bank Manager \| இலங்கை<br>கிறிஸ்தவம் | 7244 \| வே<br>1985 \| வவுனியா \| 161 cm<br>Doctor \| இலங்கை<br>ரேவதி(மீனம்) \| கி.பா: 06 |
| 6891 \| வே<br>1977 \| யாழ்நகர் \| 172 cm<br>AC Technician \| இலங்கை<br>புனர்பூசம்(கடகம்) \| கி.பா: 33 | 3990 \| வே<br>1985 \| அரியாலை \| 163 cm<br>Hospital Staff \| இலங்கை<br>பூராடம் (தனுசு) \| செவ்: 8 |
| 7376 \| வே + வி<br>1976 \| கோப்பாய் \| 167 cm<br>Education Center \| இலங்கை<br>புனர்பூசம்(கடகம்) \| செவ்: 07 | 5761 \| ப<br>1984 \| நல்லூர் \| 155 cm<br>Teacher \| இலங்கை<br>அஸ்வினி (மேடம்) \| செவ்: 12 |
| 5608 \| வே<br>1976 \| வவுனியா \| 162 cm<br>Surveyor Engineer \| இலங்கை<br>மகம் (சிம்மம்) \| கி.பா: 26 \| செவ்: 07 | 5213 \| வே<br>1981 \| மிருசுவில் \| 165 cm<br>Development officer \| இலங்கை<br>மிருகசிரீடம் (ரிஷபம்) \| கி.பா: 02 |
| 6343 \| வே<br>1975 \| அல்வாய் \| 172 cm<br>Account Assistant \| இலங்கை<br>கிறிஸ்தவம் | 5890 \| ப<br>1979 \| அல்வாய் \| 165 cm<br>Development officer \| இலங்கை<br>ரோகினி (ரிஷபம்) \| கி.பா: 67 |

அருந்ததி

www.arunthathee.com | 077 716 45 24

480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27


# ஊருக்குள் வந்த முதலையை கிராமத்தவர்கள் மடக்கினர்!



மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் கிராமத்துக்குள் வந்த 10 அடி நீளமான முதலை ஒன்றை நேற்றுப் புதன்கிழமை காலை கிராமத்தவர்கள் பிடித்து பொலிஸார் மூலம் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த சில தினங்களாக கிழக்கில் பெய்து வரும் அடைமழையின் காரணமாக ஏற்பட்ட நீரோட்டத்தில் இந்த முதலை திசை தடுமாறி ஊருக்குள் வந்துள்ளது.

வெள்ள நீர் வற்றியதும் முதலை கிடப்பதை அவதானித்த மீனவர்களும் கிராம மக்களும் முதலையை கயிற்றால் கட்டி வைத்தனர். இதனை அடுத்து காத்தான்குடிப் பொலிஸாருக்கும், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவித் தனர். இந்நிலையில் இந்த முதலை வன ஜீவராசிகள் திணைக்களத்தால் வேறு நீர்நிலையில் விடுவதற்குக் கொண்டு செல்லப்பட்டது. (ச)

# பிணை முறி கொடுக்கல் வாங்கலால் அரசுக்கு எந்த நட்டமும் ஏற்படவில்லை!

### நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக அரசாங்கத்துக்கு எந்த நட்டமும் ஏற்படவில்லை என நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் தொடர்பில் கோப் குழு வெளியிட்ட அறிக்கை மீதான நாடாளுமன்ற விவா தத்தில் பங்கேற்று உரை யாற்றிய போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

வரலாற்றில் மிகவும் குறைந்த விலைக்கு வெளியிடப்பட்ட பிணை முறி கொடுக்கல் வாங்கல் இதுவாகும். எதிர்க் கட்சிகள் இதனை மூடி மறைக்க முயற்சிக்கின்றன.

மத்திய வங்கி பிணை முறி மோசடியின் ஊடாக ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அந்த நட்டத்தைக் காண்பிக்குமாறு சவால் விடுகின்றேன்.

2009 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுக் கல் வாங்கல்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்கு மாறு கணக்காய்வாளர் நாய கத்திடம் நான்கு தடவைகள் கேட்ட போதிலும் இதுவரை யில் அந்த அறிக்கை கிடைக் கவில்லை.

இந்த விவரங்கள் ஜே.வி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பி னர் பிமல் ரட்நாயக்கவிடம் வழங்கப்பட்டுள்ளது.

சுயாதீன கணக்காய்வாளர் திணைக்களம் என்றால் ஏன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை? இது குறித்து விசா ரணை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

மத்திய வங்கியின் கடமை யாற்றி வரும் சில அதிகாரிகள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்ற னர். இவர்கள் தொடர்பில் பொறுமை காத்தமை போதும்.

இவர்களின் பெயர் விவரங் கள் விரைவில் வெளியிடப் படும். அதேபோன்று எமது அமைச்சரவையிலும் முது கெலும்பு இல்லாத சிலர் இருக்கின்றார்கள்.

இவர்கள் நாம் இல்லாத நேரத்தில்தான் கூச்சல் இடு வார்கள் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

# பிணை முறியில் முடிவொன்றை எடுக்காவிடின் நிறைவேற்று ஜனாதிபதியினால் பயனில்லை!

### பரிகசிக்கிறார் பந்துல குணவர்தன



கொழும்பு, ஜன.26

பிணை முறி மோசடியில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்காவிடின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதியாக மைத்திரிபால சிறி சேன இருப்பதில் எந்தவொரு பயனுமில்லை என்று நாடா ளுமன்ற உறுப்பினரான பந் துல குணவர்தன தெரிவித் துள்ளார்.

கோப் குழுவின் அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவா தத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பில் உரிய சட்டநடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இச் சபையில் வலியுறுத்திய ஜே.வி.பியின் கருத்தை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

இதன் குற்றவாளிகளுக்கு பாரபட்சம் பாராது தண்டனை வழங்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகத் தொடர்ந் தும் இருந்து வருகிறது.

இப்படியாக பெரும் மோச டியில் ஈடுபட்டவர்கள் தற் போது புதிய பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன.

இதற்கு பிணைமுறி என்று பெயரிட்டால் சிறப்பாக இருக் கும். எனவே, இதுவிடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன காத்திர மான முடிவொன்றை எடுக்க வேண்டும் என்று நாம் கேட் டுக் கொள்கிறோம். அப்படி அவரால் முடியாது போனால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அவர் இருப்பதிலேயே பயனில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# பிணை முறி குறித்து நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு சபாநாயகருக்கே உள்ளது!

### சபையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்



மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம் தொடர்பான கோப் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண் டிய பொறுப்பு சபாநாயக ருக்கே உள்ளது என்று அமைச் சர் ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார்.

கோப் குழுவின் அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவா தத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பிணைமுறி மோசடி விவ காரத்தில் பெரும்பாலான குற் றச்சாட்டுக்கள் இன்னும் நிரூபிக் கப்படவில்லை.

கோப் குழு அறிக்கையில் நானும் கையொப்பமிட்டுள் ளேன் என்ற வகையில் யாரே னும் தவறிழைத்திருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண் டும் என்பதே எனது நிலைப் பாடாக உள்ளது.

இதேவேளை, மத்திய வங் கியின் பிணை முறி விவகாரம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பற்றி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆராய வேண் டும்.

இந்த விடயம் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணை கள் மேற்கொள்ளப்பட வேண் டும்.

இந்த மோசடி எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை இத னூடாகத் தெளிவாகக் கண்ட றிந்து கொள்ளமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# மதுரையில் முள்வேலி பாய்ந்தனர் இலங்கை விமானப் பணியாளர்கள்!

கொழும்பு, ஜன.26

தமிழ்நாட்டில் ஏறுதழுவுதல் தடைக்கு எதிராக நடத்தப் பட்ட போராட்டத்தால், மது ரையில் இலங்கை விமான சேவை விமானிகளும், பணி யாளர்களும் முள்வேலிகளைக் கடந்து விமானத்துக்குச் செல் லும்காட்சி அடங்கியகாணொலி ஒன்று இணையத்தில் வெளி யாகிப் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.



ஏறு தழுவுதல் தடைக்கு எதி ராக நடத்தப்பட்ட போராட் டங்களின் போது, இலங்கை விமான சேவை பணியாளர் களால், மதுரை விமான நிலை யத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால், விமானிகள் மற் றும் விமானப் பணிப்பெண் கள், அதிகாரிகள், பற்றைகள் நிறைந்த பகுதி ஊடாகச் சென்று, முள்வேலி ஒன்றின் ஊடாக, விமான நிலையத் துக்குள் நுழைந்துள்ளனர்.

இந்தக் காட்சி அடங்கிய காணொலி இணையத்தில் பரவியுள்ளது.

இது குறித்து இலங்கை விமான சேவை அதிகாரி ஒரு வர் தெரிவித்தவை வருமாறு:-

விமான நிலைய அதிகாரிக ளிடம் அனுமதி பெறப்பட்ட பின்னரே, இவ்வாறு முள் வேலியைக் கடந்து இலங்கை விமான சேவைப் பணியாளர் கள்தமது விமானத்தை அடைந் தனர்.

போராட்டக்காரர்கள் வீதிக ளைத் தடை செய்திருந்தனர். மதுரை விமான நிலையம் மிகச் சிறியது. அதனைச் சுற்றி போராட்டக் காரர்கள் இருந் தனர்.

திட்டமிட்ட நேரத்தில் பய ணிகளுக்குச் சேவையாற்ற வேண்டியிருந்தமையால், மாற்று வழியில் விமானப் பணிப் பெண்கள் மற்றும் அதிகாரிகள் விமானத்தை அடைய வேண் டியிருந்தது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# மத்திய வங்கி மோசடி தொடர்பான புள்ளிவிவரம் வெறும் அனுமானமே!

### லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர் பாகத் தற்போது தெரிவிக்கப் படும் புள்ளிவிவரங்களானவை வெறும் அனுமானங்களின் அடிப்படையில் கணக்கிடப் பட்டவையே என்று சபை முதல்வரும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள் ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் தொடர்பில் கோப் குழு வெளியிட்ட அறிக்கை மீதான நாடாளுமன்ற விவா தத்தில் பங்கேற்று உரை யாற்றிய போதே அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

பிணை முறி மோசடி தொடர் பில் தற்போது தெரிவிக்கப் படும் புள்ளி விவரங்கள் அனைத்தும் உயர்நீதிமன் றத்தால் நிராகரிக்கப்பட்டவை யாகும்.

பிணைமுறி விவகாரம் தொடர்பாகத் தாக்கல் செய்யப் பட்டிருந்த வழக்கை உயர் நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது சம்பந்தப்பட்ட புள்ளி விவரங் கள் கணக்கிடப்பட்ட அடிப் படை பற்றி வினவப்பட்டி ருந்தது. அப்போது, அவை அனுமானங்களின் அடிப்படை யிலேயே கணக் கிடப்பட்டது என்று மனுதாரர் தரப்பில் பதிலளிக்கப்பட்டிருந் தது.

எனினும், அனுமானங்களின் அடிப்படையிலான கணக்கீடு களை ஏற்க முடியாது என்று உயர்நீதிமன்றம் அவற்றை நிராகரித்திருந்தது. ஆகவே, இதுவொரு கற்பனையின் அடிப்படையிலான நட்டக் கணக்காகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆக்கிரமிப்பு நிலங்களை விடுவிக்கக் கோரி கேப்பாபுலவு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

## இராணுவத்தினரின் எச்சரிக்கையை மீறி மழைக்கு மத்தியில் நடந்தது






முல்லைத்தீவு, ஜன.26

இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமது நிலங்களை மீளத் தம்மிடம் ஒப்படைக்க வலியுறுத்தி கேப்பாப்புலவு மக்கள் அந்தப்பகுதி பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கொட்டும் மழைக்கு மத்தியிலும் முன்னெடுத்திருந்தனர்.

நேற்றுக்காலை முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி வருகை தருகிறார் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து கேப்பாபுலவு மக்கள் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட னர். எனினும், தெரி விக்கப்பட்டவாறு ஜனாதிபதி அங்கு வருகை தர வில்லை.

முல்லைத்தீவு, கேப்பாப்புலவுக்கு ஜனாதிபதி வருகை தரும் போது கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடக் கூடாது என்று இராணுவத்தினர் எச்சரித்திருந்த நிலையிலும் அவர்கள்போராட்டத்தை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தனர்.

கேப்பாப்புலவு மாதிரிக் கிராமத்தில் வாழ்ந்து வரும் தங்களின் சொந்தக் காணிகள் விடுவிக்கப்படவில்லை என்றும் மாறாக வற்றாப்பளைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் காணிகள்தான் விடுவிக்கப்படும் பகுதியில் உள்ளன என்றும் கேப்பாப்புலவு மக்கள் குறிப்பிடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கும் சில உறுதிக் காணிகள் கேப்பாப்புலவுப் பகுதியில் உள்ளன. அவையும் விடுவிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், நேற்றுக்காலை கேப்பாப்புலவு பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக ஒன்று திரண்ட மக்கள் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடாக முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் ஜனாதிபதிக்கான மகஜரையும் நேற்றுக் காலை கையளித்துள்ளனர். (எ-81)

# 36 ஆண்டு நிறைவு விழாக் காணும் மன்னார் மறைமாவட்டம்

மன்னார்,ஜன.26

யாழ். மறைமாவட்டத் திலிருந்து 1981 ஆம் ஆண்டு பிரிந்து தனி மன்னார் மறை மாவட்டமாக உதயமாகி 36 ஆண்டுகள் நிறைவு அடைவதையிட்டு நிறைவு விழாத் திருப்பலி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவை முன்னிட்டு மூன்று தினங்களாக மன்னார் மறை மாவட்ட அனைத்து பங்குகளிலும் ஆயத்த வழிபாடுகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விழாவில் அனைத்து பங்கு மக்களும் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய விழாவின் போது ஒவ்வொரு பங்கு மட்டங்களில் இந்த வருடம் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் மூலம் பங்கு மேய்ப்புப் பணி சபை செயலாளர்களால் கையளிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-112)

# வவுனியாவில் வீதி விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பம்

வவுனியா, ஜன.26

வவுனியாவில் வீதி ஓரங்களில் மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக வீதியோரங்களில் மின் விளக்கு இன்மையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வந்தனர்.

மேலும் வீதிகளில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் பல மாதங்களாக ஒளிர்வதில்லை என்று பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு சென்றிருந்தனர். இதையடுத்து வீதி மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# மாங்குளம் பொதுச் சந்தையில் மக்களும் வியாபாரிகளும் சிரமம்



புதுக்குடியிருப்பு, ஜன.26

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முக்கியமான சந்தைகளில் ஒன்றான மாங்குளம் பொதுச் சந்தையை புதுக்குடியிருப்பு பிரதேசசபை உரிய முறையில் பராமரிப்பதில்லை என பொதுமக்களும் வியாபாரிகளும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சந்தைக்கு முன்பாக மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் அங்கு வருகின்ற பொதுமக்களும் வியரபாரிகளும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபைக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் வியாபாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் பிரதேச சபை இனி என்றாலும் உரிய அக்கறை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-81)

# புனரமைக்கப்பட்ட பாலம் திறந்து வைக்கப்பட்டது



கிளிநொச்சி, ஜன.26

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் குளத்தின் புனரமைப்புச் செய்யப்பட்ட இடது கரையில், பிரதான வீதியில் உள்ள பாலம் கடந்த சனிக் கிழமை மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சரும் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகருமான பைசர் முஸ்தபாவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், அங்கஜன் இராமநாதன் மற்றும் வடமாகாண மீன்பிடி அமைச்சர் டெனிஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-21)

# முல்லை. ஒதியமலையில் வீடு வழங்கல்: தேவையானோர் விண்ணப்பிக்க முடியும்

## பிரதேச செயலாளர் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதிய மலை கிராம அலுவலர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் அமைக்கப் படவுள்ள மாதிரிக்கிராமத்தில் ஐம்பது வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஒவ்வொன்றும் அரை ஏக்கர் காணியில் 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டமும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஏக்கர் வயல் நிலமும் வழங்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த, காணிகள் அற்ற, இது வரை எந்தவொரு வீட்டுத்திட்டமும் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும் என ஒட்டுசுட் டான் பிரதேச செயலாளர் ய. அனிருத்தனன் தெரிவித்தார். (ம-81)

# வன்னேரியில் மீனவர்களுக்கான ஓய்வு மண்டப வேலைத் திட்டம்

## நேரில் பார்வையிட்டார் டெனிஸ்வரன்




கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் அமைக்கப் பட்டு வரும் மீனவர்களுக்கான ஓய்வு மண்டப வேலைத் திட்டத்தை மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் அண்மையில் விஜயம் மேற்கொண்ட போது நேரில் சென்று பார்வையிட்டார்.

வடமாகாண மீன்பிடி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து இந்தத் திட்டத்துக்கான நிதி வழங்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.


அதன்போது அங்கு பிரசன்னமாகி இருந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒப்பந்த காரருக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கும் போது, ஒப்பந்தகாரர் இந்த வேலைத்திட்டத்தை விரைவாகவும் நேர்த்தியாகவும் முடித்துக்கொடுக்க வேண்டுமெனவும் பணித்தார்.

பின்னர் அங்கு குளக் கரையில் முதலமைச்சரின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி ஊடாக அமைக் கப்படும் சுற்றுலாமையத்தையும் அவர்பார்வையிட்டார். (இ)

காலைக்கதிர்
வியாழக்கிழமை 26.01.2017 



# விழிப்புடன் செயற்பட்டு டெங்கை முற்றாக ஒழிப்போம்



எஸ்.நிதர்சன்

டெங்கு நோய் என்பது யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் சமாளிக்க முடியாத சவாலாகவே இருந்து வருகின்றது. இருந்த போதிலும் வடமாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இதன் நோய்த் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து சுகாதாரத் திணைக்களத்தினர் அதில் வெற்றியைப் பெற்றிருந்த போதிலும், டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் உரிய பலாபலன்களை அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

இவ்வாறான டெங்கு நோய்த் தாக்கம் தொடர்ந்தும் குறைவின்றி அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களாக பொதுமக்களுடைய ஒத்துழைப்பின்மை, சுகாதாரத் துறையினரின் போதிய செயற்பாடின்மை, இந்த விடயத்திலான மத்திய அரசின் செயற்பாடுகள் குறைவாக இருக்கின்றமை போன்ற பல காரணங்களைக் குறிப்பிடமுடியும்.

**2086 டெங்கு நோயாளர் கடந்த வருடத்தில் பதிவு**

கடந்த 2016 ஆம் ஆண்டை எடுத்துக் கொண்டால், யாழ். மாவட்டத்தில் 1272 டெங்கு நோயாளிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மட்டும் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். மாவட்டத்தில் மொத்தமாக 2086 டெங்கு நோயாளர்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல், டெங்குத் தாக்கம் காரணமாக 3 நோயாளர்கள் கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் இறந்திருக்கிறார்கள்.

அந்த வகையில் டெங்குத் தாக்கம் யாழ்ப்பாணத்தில் இன்னும் வாட்டிவதைக்கின்ற மிகப் பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடிய விடயமாக இருக்கிறது. இவ்வாறான டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படக் கூடிய நட வடிக்கைகள் என்ன? தற்போதிருக்கக் கூடிய சூழ்நிலையில் எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென மாகாண மற்றும் மத்திய சுகாதாரத்துறை சார்ந்தவர்கள் கூடிப் பேசி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டிய காலகட்டமாக இருக்கின்றது.

**மழைகாலத்தில் தாக்கம் அதிகரிப்பு**

இவ்வாறான தேவையைக் கடந்த வருடம் வெளியாகியிருக்கின்ற புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக, மழை காலங்களில் இவ்வாறான டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்திருப்பதாக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் புள்ளி விவரத்தின் மூலம் தெரிய வருகின்றது. இதன் காரணம் மழை காலத்தில் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் ஒரு சிறந்த பொறிமுறையை யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்காமையே இதற்கான முக்கிய காரணமென்பதை இந்த புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இதனூடாக நாங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக, 2016 டிசெம்பர் மாதத்தில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருக்கின்றார்கள். இந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 298 டெங்கு நோயாளர்கள் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருக்கின்றார்கள். அதற்கு அடுத்து அதிக எண்ணிக்கையாக கடந்த ஜனவரி மாதத்தில் 255 பேர் சிகிச்சை பெற்றிருக்கின்றார்கள்.

ஆகவே, இந்த இரண்டு மாதங்களையும் நாங்கள் எடுத்துக் கொண்டால் அது அதிகமாக மழையால் பாதிக்கப்பட்ட மாதங்களாக அல்லது மழை வீழ்ச்சி அதிகளவிலான மாதங்களாக இருக்கின்றன. இவற்றைக் கொண்டு டெங்குத் தாக்கத்துக்கு எங்களுடைய சூழல் மழை காலங்களில் சுற்றுச்சூழலை உரிய முறையில் பேணாதமையும் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள், போதுமான விழிப்புணர்வுச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளாமையே காரணங்களாகக் கூற முடியும்.

**வறட்சியான காலத்தில் டெங்குத் தாக்கம் குறைவு**

இதனை விட, மே மாதம் என்பது மிகவும் வறட்சியான காலப்பகுதியாக இருந்ததால் டெங்கு நோயின் தாக்கம் மிகக் குறைந்த அளவில் பதிவாகி இருக்கின்றது. கடந்த வருடத்தில் அதிகரித்த டெங்கு நோயாளர்கள் தொகையையும் மிகக் குறைந்தளவிலான டெங்கு நோயாளர்கள் தொகையையும் ஒப்பிட்டு நோக்கும் போது டெங்கு நோயின் பாதிப்புக்கு அதிக மழை காலங்களே ஏதுவான சூழலாக இருப்பது தெரியவருகின்றது.

ஆக, இவ்வாறான கால கட்டங்களில் குறிப்பாக மக்களைக் காப்பாற்றுவதற்கும் அதற்குரிய விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும் மழை காலத்துக்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே செயற்றிட்டங்களை வடக்கு மாகாண மற்றும் மத்திய சுகாதார அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாட்டை இந்தப் புள்ளி விவரங்கள் எங்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.

உண்மையில் கடந்த காலங்களில் டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய, மாகாண சுகாதார அமைச்சுக்கள் எடுத்த முயற்சிகள் குறித்து நாங்கள் குறைத்து மதிப்பிட முடியாது. மாகாண சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் முப்படையினரின் ஒத்துழைப்புடன் யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டது.

**விழிப்புணர்வு நடவடிக்கை**

இந்தத் திட்டத்தின் மூலம் முப்படையைச் சேர்ந்தவர்கள் பொலிஸார், இராணுவம், சுகாதாரத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வீடு வீடாகச் சென்று அங்கு சோதனைகளை மேற்கொண்டு பலருக்கு விழிப்புணர்வை, டெங்கு நோய் பரவுவதற்கு ஏதுவான சூழ்நிலையை வைத்திருந்த காரணத்தால் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எனினும், இந்த நடவடிக்கையை மீறி யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்ந்து அதிகரித்து வருதை நோக்கும் போது எங்களுடைய செயற்றிட்டங்களை மாகாணத்தில் அல்லது யாழ். மாவட்டத்தில் ஒழிப்புச் செயற்றிட்டங்களை மேலும் விரிவாக்குகின்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் மீண்டும் அதிகமாக ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் இருக்கின்றது.

அந்தக் கடப்பாட்டைக் கடந்த 2016 ஆம் ஆண்டில் வெளியான டெங்கு நோயாளர் பற்றிய தரவுகள் தெளிவாகக் கூறி நிற்கின்றன. ஆகவே நாங்கள் வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவதை விட, வெள்ளம் வருமுன் அணை கட்டுவதே சிறந்தது. இவ்வாறான செயற்றிட்டங்களை எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு இப்போதிருந்தே நாங்கள் ஆரம்பிக்க வேண்டும். இது தொடர்பாக மாவட்ட சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகள் அதிக கவத்தைச் செலுத்த வேண்டும்.

**முற்று முழுதாக இல்லாது ஒழிப்போம்**

மத்திய சுகாதாரத்துறையினருடன் இணைந்து டெங்குக் கட்டுப்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்க அல்லது அதற்கான நிதி ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளுக்கான திட்டமிடல்களை இப்போதிருந்தே ஆரம்பிப்பதன் மூலம் எதிர்காலத்தில் டெங்கு நோய் அற்ற மாவட்டமாக யாழ்ப்பாணத்தை மாற்ற முடியும் என்பதே திண்ணமான நம்பிக்கை.

கடந்த காலங்களிலே டெங்கு நோய் போன்று மிக அதிக சவால்களைக் கொண்டதாக மலேரியா காய்ச்சல் போன்ற நோய்கள் காணப்பட்டன. இதனைவிட, பல்வேறு நோய்கள் மாவட்டத்துக்கு பெரும் சவால்களாக இருந்தபோதும் அந்தச் சவால்களைச் சமாளித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரத்துறையினரின் முயற்சிகள் பாராட்டுதற்குரியவை. அதே போன்று, இவ்வாறான செயற்றிட்டங்கள் எதிர்காலத்திலும் விரிவுபடுத்துவதன் ஊடாகவே டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும்.

குறிப்பாக, டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உட்படுபவர்களின் எண்ணிக்கையை நாங்கள் மாவட்ட ரீதியில் எடுத்து நோக்கினால் தாழ் நிலப் பகுதிகளிலுள்ள மக்களே இவ்வாறான நோய்த் தாக்கத்துக்கு அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறான தாக்கங்கள் தாழ் நிலப்பகுதிகளான பொம்மைவெளி போன்ற பகுதிகளே உள்ளாக்கப்பட்டிருக்கின்றமை புள்ளி விவரங்கள் மூலமாக அறியமுடிகிறது.

**அதிகாரிகளே உஷார்!**

டெங்கு நோய் அதிகமாகப் பரவும் இடங்களை இனங்கண்டு அந்த இடங்களில் எவ்வாறு டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டங்களை முன்னெடுக்க முடியும். இதனூடாக நுளம்புப் பரவலை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் போன்ற திட்டங்களை இப்போதிருந்தே மாகாண மாவட்டச் சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகள் முன்னெடுப்பதே 2017 ஆம் ஆண்டிலும் இவ்வாறான டெங்கு நோய்த் தாக்கத்தைத் தவிர்ப்பதற்கு உரிய வழியாக இருக்க முடியும்.

எதிர்காலத்துக்கான திட்டமிடல்களை அதாவது நோய் பரவுவதைத் தடுப்பதற்கான திட்டங்களை நோய்க்கு ஏதுவான காரணிகளை அகற்றுவதற்கு மாவட்ட சுகாதாரத் துறை சார்ந்த அதிகாரிகள் இப்போதிருந்தே முன்னெடுப்பதன் ஊடாக எதிர்காலத்தில் டெங்கு நோயின் தாக்கமற்ற யாழ்ப்பாணத்தை மாற்ற முடியும். அதனுடைய பெருமையையும் மாவட்டச் சுகாதாரத் துறைசார்ந்த அதிகாரிகள் பெற்றுக் கொள்ள முடியும்.



காலைக்கதிர்
Kalaikkathir





# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 73

பொன்.வேணு கிருஷ்ணா

ட்ரம்ப் தனது பேரினவாத முன்னோக்கை இந்த வாக்கியத்தைக் கொண்டு சுருங்கக் கூறினார்: ‘‘நமது நடுத்தர வர்க்கத்தின் செல்வம் அவர்களது வீடுகளில் இருந்து பறிக்கப்பட்டு உலகெங்கிலும் மறுவிநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இது உண்மையல்ல! உண்மையில், உழைக்கும் மக்களால் உருவாக்கப்பட்ட செல்வம்தான் திருடப்பட்டு மறுவிநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இது வெளிநாடுகளுக்கு அல்ல.’’ ட்ரம்ப் மற்றும் அவரது அமைச்சரவையில் பெரும்பான்மையாக இருக்கும் பில்லியனர்கள் மற்றும் பல-மில்லியனர்கள் உள்பட நிதிப் பிரபுக்களது ஒரு சொற்ப எண்ணிக்கை யிலான உயரடுக்கை கொண்ட அமெரிக்க முதலாளிகளால் தான் அது கைப்பற்றப்பட்டிருக்கிறது.( Trump summed up his chauvinistic perspective with the sentence: The wealth of our middle class has been ripped from their homes and then redistributed all across the world. Not true! The wealth produced by working people has indeed been stolen and redistributed, but not to foreigners. It has been seized by American capitalists - the tiny elite of financial aristocrats like Trump himself and much of his cabinet, the billionaires and multi - millionai res.)

### ஹிட்லரின் பெரும் பொய் ட்ரம்ப்பின் பெரும் பொய்



1930களில் பெருமந்தநிலையை உருவாக்கிய இலாப அமைப்புமுறை நெருக்கடியின் நாசகரமான பின்விளைவுகளுக்கு, முதலாளிகள் மீதல்லாமல், யூதர்கள் மீது பழிபோட்டமை தான் ஹிட்லரின் பெரும் பொய் ஆக இருந்தது. ட்ரம்ப்பின் பெரும் பொய் 2008 இல் வெடித்த பொருளாதார நெருக்கடி தொடர்பான வெகுஜன கோபத்தைத் திசைதிருப்புவதற்கு ஒரு மாறுபட்ட பலியாட்டை முன்வைக்கிறது, ஆயினும், இதுவும் அதே அளவுக்கு மோசடியானதும் பிற்போக்குத்தனமானதுமே ஆகும். ( Hitler's big lie was to blame the Jews, not the capitalists, for the devastating consequences of the crisis of the profit system that produced the Great Depression of the 1930s. Trump's 'big-lie' offers a different scapegoat to divert popular anger over the economic crisis that erupted in 2008, but it is just as false and reactionary.)

1930களில் ஜேர்மனியில் போலவே, பொருளாதார தன்னிறைவு மற்றும் இராணுவ விரிவாக்கம் ஆகியவற்றின் மூலமாகத் தேசிய மகத்துவத்தை மீட்கும் முன்னோக்கு தவிர்க்கவியலாமல் போருக்கு இட்டுச் செல்லவும்கூடும். கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் அமெரிக்க இராணுவவாதத்தின் பெருக்கம் அமெரிக்காவின் நீண்டகால பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு வன்முறையான தீர்வைக் காண்பதற்கு அமெரிக்க ஆளும் உயரடுக்கு செய்து வருகின்ற முயற்சியில் இருந்தே எழுகின்றது.

### பாசிச வார்த்தைக் களஞ்சியத்தில் இருந்து எடுக்கப்பட்டிருந்த ஒரு மொழி



Pledge to serve: After brief remarks from Trump, Pence (above) officially swore in the more than a dozen senior staff members in the ceremony on Sunday afternoon in the East Room


‘ட்ரம்ப்பின் உரை முழுக்க முழுக்க பாசிச வார்த்தைக் களஞ்சியத்தில் இருந்து எடுக்கப்பட்டிருந்த ஒரு மொழியாக இருந்தது. அவரின் தலைமை அரசியல் உதவியாளர்கள் பலர் ‘வெள்ளை தேசியவாதிகள், அதாவது வெள்ளை மேலாதிக்கவாதிகள், யூத-எதிர்ப்பாளர்கள் மற்றும் நவ-நாஜிக்களது ஒரு புகலிடமாய்த் திகழ்ந்த Breitbart News இன் முன்னாள் தலைவருமான ஸ்டீபன் கே.பனானின் உதவி இதில் அவருக்கு இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ( Trump's speech was shot through and through with language drawn from the vocabulary of fascism, with the assistance, no doubt, of his top political aide, Stephen K. Bannon, former chief of Breitbart News, a haven for white nationalists, i.e., white supremacists, anti-Semites and neo-Nazis.)





நாம் ஒரே இதயத்தை, ஒரே தாயகத்தை, மற்றும் ஒரே மகத்தான தலைவிதியைப் பகிர்ந்து கொள்கிறோம் என்று புதிய ஜனாதிபதி அறிவித்தார். அமெரிக்காவுக்கு ஒரு முழுமையான விசுவாசத்தைக் கோரிய அவர் நமது இராணுவம் மற்றும் சட்ட அமுலாக்கப் பிரிவுகளின் மகத்தான ஆண்கள் மற்றும் பெண்களை பாராட்டினார், ஒரு புதிய தேசியப் பெருமிதத்திற்கு அழைப்பு விடுத்தார், அத்துடன் நாம் அனைவர் சிந்தும் இரத்தமும் தேசபக்தர்களது ஒரே சிவப்பு இரத்தம் என்று கூறி முடித்தார்.( The new president declared, We share one heart, one home, and one glorious destiny. He demanded a total allegiance to the United States of America, hailed the great men and women of our military and law enforcement, called for a new national pride, and concluded that we all bleed the same red blood of patriots.)

### இஸ்லாமிய பயங்கரவாதத்தை அழிப்பதற்கு அவர் அழைப்பு விட்டார்

இந்த பூமியின் முகத்தில் இருந்து




நாம் அகற்றவிருக்கின்ற தீவிரப்பட்ட இஸ்லாமிய பயங்கரவாதத்தை அழிப்பதற்கு அவர் அழைப்புவிட்ட இரத்தம் சூடேறச் செய்யும் சூளுரை, மத்திய கிழக்கு மற்றும் ஒட்டுமொத்த முஸ்லீம் உலகின் பரந்த மக்களால், சுமார் 1.6 பில்லியன் மக்களால், நியாயமான வகையில், ஓர் அச்சுறுத்தலாக எடுத்துக் கொள்ளப்படும். அவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதில் இருந்து தடை செய்யப்படவிருக்கிறார்கள் என்பதை ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.




( His blood - curdling pledge to destroy radical Islamic terrorism, which we will eradicate from the face of the Earth will be taken as a threat, legitimately, by the broad masses of the Middle East and the entire Muslim world, some 1.6 billion people. Trump has already declared that they are to be banned from entering the United States.)

### ஒன்றையொன்று கடித்துத் தின்னும் ஒரு நாய்ச்சண்டையின் தொடக்கம்

ட்ரம்ப்பின் உரை பெய்ஜிங், மாஸ்கோ மற்றும் தெஹ்ரானில் மட்டு மல்லாது பேர்லின், பாரிஸ், லண்டன் மற்றும் டோக்கியோவிலும் கூட ஒரு போர் அறிவிப்பாகவே பார்க்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. அனைத்துத் தேசங்களுக்குமே தமது நலன்களை முதன்மையாக நிறுத்தும் உரிமை இருக்கிறது என்று அவர் கூறிய போதே, சந்தைகளுக்காகவும், கச்சாப் பொருள்கள் மற்றும் மலிவு உழைப்பு வளங்களுக்காகவும் மற்றும் முக்கியமான மூலோபாய நிலைகளுக்காகவும் பெரும் ஏகாதிபத்திய சக்திகளிடையே ஒன்றையொன்று கடித்துத் தின்னும் ஒரு நாய்ச்சண்டையின் தொடக்கத்தை அவர் அறிவித்துக் கொண்டிருந்தார். இந்த சண்டையின் தடுத்து நிறுத்த முடியாத தர்க்கம், மறைமுக போருக்கு இட்டுச் செல்வதாகும்.( There is no question that Trump's speech will be read as a declaration of war, not only in Beijing, Moscow and Tehran, but also in Berlin, Paris, London and Tokyo. When he said that it is the right of all nations to put their own interests first, he was announcing the onset of a dog - eat - dog struggle among the major imperialist powers for markets, sources of raw material and cheap labor, and key strategic positions. The inexorable logic of this struggle leads proxy war.)





இராணுவ விரிவாக்கம் மற்றும் அதீத தேசியவாதம் ஆகியவை கொண்ட ட்ரம்ப்பின் கொள்கை அமெரிக்க மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மிக அபாயம் அறிவிக்கும் தாக்கங்களைக் கொண்டதாகும். வெளிநாட்டிலோ அல்லது உள்நாட்டிலோ எந்தவித எதிர்ப்பையும் பொறுத்துக் கொள்ளத் தயாரில்லாத ஓர் இரக்கமற்ற நிதியியல் முதலைகளின் வெகுசிலரணிக்காக அவர் பேசுகிறார். உலகின் ஒவ்வொரு நாட்டிற்கும் எதிராக அணிதிரட்டப்படுகின்ற ஓர் அமெரிக்கக் கோட்டைக்கான அவரது அழைப்பு அத்தனை உள்நாட்டு எதிர்ப்பையும் ஒடுக்குவது என்ற அர்த்தமுடையதாகும்.( Trump's policy of military expansion and extreme nationalism has the most ominous implications for the democratic rights of the American people. He speaks for a ruthless financial oligarchy that will brook no opposition, foreign or domestic. His call for a Fortress America, mobilized against every country in the world, means the suppression of all domestic dissent.)

(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



38

## திம்புப் பேச்சுக்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இணைந்துகொள்வதற்கு முன்பாக ஈழத் தேசிய விடுதலை முன்னணி சந்திரகாசனின் செல்வாக்கின் கீழ் செயற்பட்டது. அவ்வேளை, முன்னணியின் தலைமை மீது இந்திய அரசின் ஆதிக்கம் இருந்தது. ரெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரெத்தினம் இந்தியாவின் விருப்பத்திற்குரியவராக இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் போன்ற அமைப்புகள் மாக்ஸிய தரிசனத்தைத் தமது கருத்தியலாகத் தழுவி நின்றன. எந்தவொரு கருத்தியல் சார்புமற்று நின்றதால் ரெலோ அமைப்பு மீது இந்திய அரசு கூடுதலான ஆதுரவு காட்டியது. தமிழ்த் தேசிய பற்றுறுதிமிக்க விடுதலைப் புலிகள், ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடன் இணைந்து கொண்டமையை அடுத்து, முன்னணித் தலைமை இந்தியாவின் ஆதிக்கத்துக்கு அடி பணியாது, சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படும் மாபெரும் அரசியல் இராணுவ சக்தியாக வளர்ந்துள்ளது என 'றோ' புலனாய்வுத் துறையினர் கணிப்பிட்டனர். விடுதலைப் புலிகளுக்கும் எம்.ஜி.ஆருக்கும் மத்தியிலான நெருங்கிய உறவு, தமிழ் நாட்டிலும் தமிழ் ஈழத்திலும் புலிகளுக்கிருந்த பேராதரவு ஆகியன முன்னணியின் தனித்துவத்துக்கு வலுச் சேர்த்தன. இந்தியாவின் ஆதரவிலும் அனுதாபத்திலும் பெருமளவு தங்கியிருந்த போதும், தமிழ் அமைப்புக்கள், தம்மை விடுதலைப் போராளிகளாகக் கருதிப் பெருமைப்பட்டாங்களே தவிர, இந்தியாவின் சதுரங்க ஆட்டத்துக்கு அசைந்து கொடுக்கும் பகடைக்காய்களாகச் செயற்பட விரும்பவில்லை.

சிறிலங்கா அரசின் பேச்சுக் குழுத் தலைவராகப் பணிபுரிந்த ஹெக்டர் ஜெயவர்த்தனாவின் நெகிழ்வற்ற, கடும் போக்கும் பேச்சுக்களின் முறிவுக்கு மூன்றாவது முக்கிய காரணமாக அமைந்தது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைக்கு மதிப்பளித்து, தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு சமரச வழியில் ஒரு நியாய பூர்வமான தீர்வை வழங்கும் நேர்மையான நோக்கம் எதுவுமற்ற ஓர் இனவாத அரசையே ஹெக்டர் பிரதிபலித்தார். அரசமைப்புச் சட்ட நிபுணர் என்ற ரீதியில், அவர் சிறிலங்காவின் அரசியல் யாப்பு எல்லைக்குள் நின்றே விவாதங்களை நடத்தினார். இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையை வலியுறுத்திய அவர், வறண்ட இறுக்கமான கடும்போக்கைக் கடைப்பிடித்தாரே தவிர, தமிழரின் நியாயமான கோரிக்கைகள் மீது எவ்வித அனுதாபமும் காட்டவில்லை. புதிதாகப் புதுமையாகச் சிந்தித்து பிரச்சினைகளை அணுகும் ஆற்றல் அவரிடம் இருக்கவில்லை. அவரது அணுகுமுறை பற்றி டிக்சிட் குறிப்பிடுகையில்,"எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனாவின் பேச்சுக்கான அணுகுமுறை உயிரோட்டமற்றது. இயந்திரச் சட்ட நியமங்களுக்குள் மட்டும் இயங்கியது. தமிழரின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் போதெல்லாம் அவை சிறிலங்காவின் யாப்பையும் ஒற்றையாட்சி முறைமையையும் மீறுவதாக அமைந்திருப்பதாகத் தொடர்ச்சியாக அவர் வலியுறுத்தினார். இதனால் திம்புப் பேச்சுக்கள் செவிடர்களின் கருத்தாடலாக மாறியது." என்றார்.

தமிழ் அமைப்புக்களின் வெளிநடப்பை அடுத்து திம்புப் பேச்சுக்கள் முறிவடைந்து போனமையால் இந்திய அரசு சினம் கொண்டது. ஏதோ ஒரு வடிவில் இந்திய அரசு தண்டிக்கும் நடவடிக்கை எடுக்குமென நாம் சரியாகவே எடைபோட்டோம். சென்னைக்கும் திம்புவுக்கும் மத்தியில் எமது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்ட 'றோ' அதிகாரிகள், எனது அறிவுறுத்தலின் பேரிலேயே தமிழ்ப் பிரதிநிதிகள் பேச்சு மேசையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள் எனக் கருதி, திம்புப் பேச்சுக்களின் தோல்விக்கு நானே சூத்திரதாரி எனத் தவறாக எடைபோட்டிருந்தனர். இது குறித்து இந்திய அரசு என்மீது அதிருப்தி அடைந்திருப்பதாக 'றோ' அதிகாரியான உன்னிக்கிருஷ்ணன் எனக்கு ஏற்கனவே எச்சரித்திருந்தார். எதிர்பார்த்தது போல, இந்திய அரசின் தண்டனை நாடு கடத்தல் உத்தரவாக என்மீது பிறப்பிக்கப்பட்டது.

1985 ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி சென்னை பெசன்ட் நகரிலிருந்து எனது இல்லத்தைச் சுற்றிவளைத்த தமிழ்நாடு காவல்துறையினர் என்னைக் கைது செய்து, ஓர் இரகசிய இடத்தில் தடுத்து வைத்தனர். மறுநாள், 'எயார் இந்தியா' விமானம் மூலம் நான் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். நான் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட சம்பவத்தின் முழு விவரங்களும் அடேல் பாலசிங்கத்தின் 'சுதந்திர வேட்கை' என்ற நூலில் விவரமாகத் தரப்படுகிறது. நடேசன் சத்தியேந்திராவுக்கும் சந்திரகாசனுக்கும் நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நாடுகடத்தல் உத்தரவு கிடைப் பதற்கு முன்னராகவே சத்தியேந்திரா லண்டன் பயணமாகிவிட்டார். சத்தியேந்திரா மீது நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை ரொமேஸ் பண்டாரியின் திருவிளையாடல் என்பது பின்பு தெரியவந்தது. சந்திரகாசனுக்கும் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏக்கும் தொடர்புண்டு என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர் நாடு கடத்தப்பட்டாரென பின்பு ஒரு தடவை 'றோ' உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் கூறினார். இந்திய அரசின் இந்த நாடு கடத்தல் நடவடிக்கை தமிழ் விடுதலை அமைப்புக்களுக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்தியது. அதாவது, இந்தியாவின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட்டால், இந்திய நல்லாதரவு தொடர்ந்து இருக்கப்போவதில்லை என்பதை உறுதிப்படுத்தியது.

தமிழர் தரப்புக்கு எதிராக இந்திய அரசின் ஒருதலைப்பட்சமான ஒழுங்கு நடவடிக்கையை இந்திய ஊடகங்கள் வன்மையாகக் கண்டித்தன. 'அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முட்டாள்தனமான நடவடிக்கை' என ஓர் இந்திய ஆங்கில நாளிதழ் கண்டித்தது. தமிழ்ப் பிரதிநிதிகள் நாடு கடத்தப்பட்டமைக்கு எதிராக தமிழ்நாடு அரசியற் தலைவர்களும் ஆவேசமாகக் குரலெழுப்பினர். 'இந்திய அரசு தமிழர்களின் உணர்வை மதிக்கத் தவறிவிட்டது' எனக் கண்டித்து தமிழகத் தலைவர்கள் பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நிகழ்த்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். என் மீது பிறப்பிக்கப்பட்ட நாடு கடத்தல் உத்தரவு மீளப் பெறப்பட்டு, நான் மீண்டும் இந்தியாவுக்கு அழைக்கப்பட வேண்டுமென்றும், நான் திரும்பும் வரை சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்ளப்போவதில்லை என்றும் பிரபாகரனும் ஏனைய ஈழத்தேசிய முன்னணித் தலைவர்களும் உறுதியான நிலைப்பாட்டை எடுத்தனர். இப்படியான நிலைமைகளை எதிர்கொண்ட ராஜீவ் அரசாங்கம் என்மீது பிறப்பிக்கப்பட்ட நாடுகடத்தல் உத்தரவை மீளப் பெற நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆறு வாரங்களுக்குப் பின்னர் நான் லண்டனிலிருந்து இந்தியா திரும்பினேன்.

*1986 நவம்பர் நடுப் பகுதியில் தென்னாசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டுறவு (சார்க்) மாநாடு பெங்களூரில் நடைபெற விருந்தது. இந்த மாநாட்டின் போது இந்திய இலங்கை அரச தலைவர்களது சந்திப்பு நடைபெற விருந்தது. இது ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு என்ப தால், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டு அதனை ஒரு மகத்தான இராஜ தந்திர சாதனையாக இந்த மாநாட்டில் அறிவித்து புகழீட்ட விரும்பினார் ராஜீவ் காந்தி.*

## பெங்களூர் பேச்சுக்கள்



தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மத்தியஸ்துவ முயற்சியில் தோல்வி கண்டதால் விரக்தியடைந்த இராஜதந்திரியாக 1986 மார்ச்சில் ரொமேஸ் பண்டாரி ஓய்வு பெற்றார். அவரது பொறுப்பில் இந்திய வெளியுறவுச் செயலராக ஏ.பி.வெங்கடேஸ்வரன் நியமிக்கப்பட்டார். வெங்கடேஸ்வரன் ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரல்லர். அத்தோடு இருவருக்கும் மத்தியில் ஒத்திசைவான நல்லுறவும் நிலவவில்லை. ஏற்கனவே தோல்வியைச் சந்தித்த போதும் இந்தியாவின் மத்தியஸ்துவ முயற்சியைக் கைவிடுவதற்கு ராஜீவ் காந்தி தயாராக இல்லை. ஜெயவர்த்தனாவுடன் தொடர்ந்து சமரச முயற்சிகளை முன்னெடுக்கும் நோக்கத்துடன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான பி.சிதம்பரம், நட்வார்சிங் ஆகிய இரு அமைச்சர்களை இந்திய அரசின் விசேட பிரதிநிதிகளாக ராஜீவ் காந்தி நியமித்தார்.

1986 நவம்பர் நடுப்பகுதியில் தென்னாசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டுறவு(சார்க்) மாநாடு பெங்களூரில் நடைபெறவிருந்தது. இந்த மாநாட்டின் போது இந்திய இலங்கை அரச தலைவர்களது சந்திப்பு நடைபெறவிருந்து. இது ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு என்பதால், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒருதீர்வு கண்டு அதனை ஒரு மகத்தான இராஜதந்திர சாதனையாக இந்த மாநாட்டில் அறிவித்து புகழீட்ட விரும்பி னார் ராஜீவ் காந்தி. தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு தீர்வுத் திட்டத்தை வகுக்குமாறு, உள்நாட்டுப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சிதம்பரத்திடமும், வெளி விவகார இராஜாங்க அமைச்சர் நட்வார் சிங்கிடமும் பிரதமர் ராஜீவ் கேட்டுக்கொண்டார்.

1986 ஏப்ரல் கடைசியில் சிதம்பரமும் நட்வார்சிங்கும் கொழும்புக்கு வருகைதந்து, தலைநகரில் நான்கு நாள்கள் தங்கி நின்றனர். அக்காலத்தில் அதிபர் ஜெயவர்த்தனாவையும், அவரது மூத்த அமைச்சர்களான லலித் அத்துலத்முதலி (தேசிய பாதுகாப்பு அமைச்சர்), காமினி திசநாயக்கா (மகாவலி அபிவிருத்தி அமைச்சர்), ஏ.சி.எஸ்.ஹமீது (வெளியுறவு அமைச்சர்) ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினர். சிங்கள அரசியற் தலைவர்களுடன் நிகழ்த்திய நீண்ட கருத்துப் பரிமாற்றத்தின் விளைவாக இந்திய மத்தியஸ்தர்களுக்கு ஓர் உண்மை புலனாகத் தொடங்கியது. தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகள் சம்பந்தப் பட்டமட்டில், குறிப்பாகத் தமிழ்த் தாயகக் கோரிக்கை குறித்து சிங்களத் தலைமை இறுக்கமான கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு தனித்துவமான தொடர் பிரதேசமாக மாற்றுவதற்கும் கடும் எதிர்ப்பு இருந்ததையும் [illegible]ர்கள் கண்டு கொண்டார்கள்.

(தொடரு

# வாகன மோசடியில் ஈடுபடவில்லை; குற்றச்சாட்டில் உண்மையில்லை

## மேல்மாகாண பிரதி அமைச்சர் லசந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26

வாகன மோசடியில் ஈடுபட்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்று பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் பேசிய போதே நேற்றுமுன்தினம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆட்சிக் காலத்தில் வீடமைப்பு பொதுவசதிகள் பிரதி அமைச்சராகக் கடமையாற்றிய போது வாகன மோசடிகள் எதிலும் ஈடுபட்டதில்லை. அரச வாகனங்கள் எதனையும் துஷ்பிரயோகம் செய்யவுமில்லை.

''மஹிந்த அரசில் பிரதி அமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் மூன்று வாகனங்களைப் பெற்றுக் கொண்டேன். அவை அனைத்தும் சட்ட ரீதியாக ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளப் பட்டவை.

''இந்த விடயங்கள் குறித்து உரிய தரப்பினருக்கு ஏற்கனவே வாக்கு மூலங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேவை ஏற்பட்டால் மீளவும் வாக்குமூலங்களை வழங்க நான் தயார்.''-என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 26.01.2017

**துர்முகிவருஷம் 2017 ஆம் ஆண்டு தைத்திங்கள் 13 ஆம் நாள் வியாழக்கிழமை சதுர்த்தி பி.இ. 5.02 வரை. பின் அமாவாசை. பூராடம் இரவு 8.32 வரை. பின்னர் உத்தராடம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம். பகல் 1.50 முதல் 3.17 வரை. சுபநேரம் காலை 8.05 முதல் 9.34 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி. தை மாத தேய்பிறை சதுர்த்தசி.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று நன்மையான நாள். தொழில் முன்னேற்றமடையும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும். வியாபாரத்தில் போதிய லாபம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**ரிஷபம்:** இன்று யோசினையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிற்பிரிவினருக்கு முன்னேற்றம் குறையும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மிதுனம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தாமதமடையும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை, பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கடகம் :** இன்று ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. எண்ணியவை நிறைவேறும். உறவுகள் பலப்படும். உத்தியோகத்தில் திறமை மேலோங்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் அடைவார்கள்.

**சிம்மம் :** இன்று மேன்மையான நாள். சகோதரவழி உதவிகள் கிடைக்கும். தொழிலில் மேன்மை உண்டாகும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். ஆடை, அணிகலன்கள் சேரும்.

**கன்னி:** இன்று அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல் உண்டாகும். சிலர் வருமானக்குறைவால் கடன் தேடி அலைவார்கள். சிலர் தொழில் இடமாற்றம் பெறுவர்.

**துலாம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. செலவுகள் அளவுக்கதிகமாகும். வர்த்தகத்தில் பழைய முதலீடுகளால் நட்டம் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை.

**விருச்சிகம்:** இன்று அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றமும், வருமானமும் அதிகரிக்கும். உத்தியோக நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு அமையும்.

**தனுசு:** இன்று அதிஷ்டமான நாள். தொழிலில் நுணுக்க முறைகளைக் கையாண்டு வருமானம் பெறுவார்கள். போட்டி பந்தயங்களால் அதிஷ்டம் உண்டாகும். பூர்வீகசொத்துகள் வந்து சேரும். சிலருக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

**மகரம்:** இன்று சலனம் மிகுந்த நாள். மனதில் ஒரு வித பதற்றம், கவலை உண்டாகும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். உறவினருடன் சச்சரவுகள் உண்டாகும். தொழில் செய்யும் இடங்களில் கவனம் தேவை. வியாபாரம் பெரும் நட்டமடையும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் உண்டாகும்.

**கும்பம்:** இன்று யோகமான நாள். தொட்டகாரியம் துலங்கும். உத்தியோகத்தில் பெரிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வாகன யோகம் உண்டு. சுப நிகழ்ச்சிகளில் கலந்து மகிழ்வார்கள். வியாபாரத்தில் வரவு உயரும். உத்தியோகத்தில் இவர்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**மீனம்:** இன்று விருத்தியான நாள். வியாபாரம் விருத்தியடையும். சுயதொழில் மேன்மை அடையும். உத்தியோகத்தில் இவர்களின் முக்கியத்துவம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

சந்திராட்டம நாள்: கார்த்திகை 2, 3, 4 ரோகிணி, மிருகசீரிடம். 1, 2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந் நாளில் சுப கருமங்களை விலக்குக.

# கண்வில்லைகளின் விலையை குறைப்பதற்கு அரசு நடவடிக்கை

## 6 ஆயிரம் ரூபாவுக்குப் பெற்று 25 ஆயிரத்துக்கு விற்பனை

கொழும்பு, ஜன.26

செயற்கைக் கண்வில்லைகளின் விலையைக் குறைக்க அரசுஉடனடிநடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதன்படி சுகாதாரத்துறை அமைச்சரின் பணிப்புரையின் பேரில் சுமார் ஒரு லட்சம் செயற்கைக்கண்வில்லைகளைஇறக்குமதி செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச வைத்தியசாலைகளில் செயற்கைகண்வில்லைகளுக்குத் தட்டுப்பாடு நிலவினால் அவற்றை நிவாரண விலையில் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதி உதவிகளை வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு வழங்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பாக சுகாதாரப் போசாக்கு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரத்ன தெரிவித்தவை வருமாறு;

''இந்தத் திட்டத்தின் கொள்கைத் தீர்மானமாக தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் சபை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

''இந்தியாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் செயற்கைக் கண்வில்லைகள் ஆறாயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கையில் 25 ஆயிரம் ரூபா முதல் 30 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

''இத்தகைய மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவந்து கண் நோயாளிகளுக்குச் சிறந்த நிவாரணம் வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

''கண் தொடர்பான சத்திர சிகிச்சைகளுக்காக அரசு வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு இலவசமாகச் செயற்கைக் கண்வில்லைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.'' - என்றார். (எ)

# 474 ஆவது பொலிஸ் நிலையம் பல்லேவெலவில் திறந்துவைப்பு




கம்பஹா, ஜன.26

கம்பஹா மாவட்டத்தில் பல்லேவெலவில் 474 ஆவது பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.


நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய அதிதியாகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்தப் பொலிஸ் நிலையத்தில் நிர்வாகம், போக்குவரத்துப் பிரிவு, குற்றப்பிரிவு மற்றும் ஏனைய வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அரசின் 600 பொலிஸ் நிலையங்கள் திறந்து வைக்கும் திட்டத்தில் 474 ஆவது நிலையம் பொதுமக்களின் சேவைக்காக இந்தப் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நந்தன முனசிங்கவும் நிகழ்வில் கலந்து கொண்டார். (எ)

## பெருந்தொகை சிகரெட்டுகளுடன் இரத்தினபுரியில் ஒருவர் கைது



இரத்தினபுரி, ஜன.26

பெருந்தொகை சட்ட விரோத சிகரெட்டுக்களுடன் இரத்தினபுரிப் பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி - முவகம பாலத்துக்கு அருகிலேயே அந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

மேலும் அவர் வசம் இருந்து வெளிநாட்டில் தயா ரிக்கப்பட்ட பல்வேறு வகையான 2 ஆயிரத்து 500 சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சந்தேகநபர் இரத்தினபுரி - பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.

இவரை இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# ஜி.எஸ்.பி. வரிச் சலுகை கிடைத்த பின் மீன் ஏற்றுமதியில் கூடுதல் வருமானம்

கொழும்பு,ஜன.26

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைத்த பின்னர் நாட்டின் மீன் ஏற்றுமதியின் மூலம் கூடுதலான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கடற்தொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக நாட்டுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்காத காரணத்தால் மொத்த ஏற்றுமதி வருமானம் குறைவடைந்தது. குறிப்பிட்ட வருமானம் கிடைக்காமையால் தேசிய வருமானத்தின் மூலம் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியையும் குறைக்க வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்பட்டது.

நாடு தொடர்பில் சர்வதேச ரீதியில் நிலவிய நற்பெயர் மீதான களங்கத்தை நீக்குவதற்கு சமகால அரசு நடவடிக்கை மேற்கொண்டதால் தற்பொழுது நாடு தொடர்பில் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஆடைத்தொழிற்துறையில் மாத்திரமன்றி, விசேடமாக மீன் ஏற்றுமதியிலும் பெரியளவான நன்மைகள் எமது நாட்டுக்குக் கிடைத்துள்ளன.

கடந்த வருடத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு 13ஆயிரத்து 932 மெற்றிக்தொன் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 21ஆயிரத்து 539 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உட்பட்ட நாடுகளுக்கு 1817 மெற்றிக்தொன் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு 515 மெற்றிக்தொன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இவை தவிர, அமெரிக்காவுக்கு 4088 மெற்றிக்தொன்னும் ஜப்பானுக்கு 1717 மெற்றிக்தொன்னும் ஏனைய நாடுகளுக்கு 5796 மெற்றிக்தொன்னும் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.-என்றார். (ஐ)

# தொல்லியல் திணைக்கள வெற்றிடங்களை துரிதமாக நிரப்ப ஜனாதிபதி ஆலோசனை



கொழும்பு, ஜன.26

தொல்லியல்திணைக்களத்தின் சிரேஷ்ட அலுவலர் தரத்துக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும், தொல்லியல் மையங்களின் பாதுகாப்பு மற்றும் தொல்லியல் செயற்பாடுகள் தொடர்பிலுள்ள தடைகளை நீக்கி, அவற்றை முறைமைப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும் அவர் ஆலோசனை வழங்கினார்.

தொல்லியல் மையங்கள் மற்றும் தொல்லியல் பொருள்களைப் பாதுகாப்பது தொடர்பில் மேலுமொரு விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றபோதே மேற்படி ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தொல்லியல் மையங்களின் பாதுகாப்புக்காக சிவில் பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்துமாறு ஜனாதிபதி அண்மையில் ஆலோசனைவழங்கியிருந்தார். அந்தச் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

இனங்காணப்பட்ட தொல்லியல் மையங்களின் பாதுகாப்புக்காக ஏற்கனவே சிவில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என சிவில் பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக் காட்டினார்.

அவர்களது தங்குமிட பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் அவர்களுக்கு தொல்லியல் தொடர்பான அறிவை வழங்கும் செயற்திட்டத்தின் தேவையும் முன்மொழியப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்லியல் மையங்களை இனங்கண்டு அவற்றின் பாதுகாப்புக்காக பொருத்தமான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் வரலாற்று மரபுரிமைகளைப் பாதுகாத்து அவற்றை அடுத்த தலைமுறையினருக்காகப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பௌத்த தேரர்கள் பாராட்டினர். தொல்லியல் துறையுடன் தொடர்புடைய அலுவலர்களும் பௌத்த துறவிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (எ)

## இல்ல மெய்வன்மை போட்டிகள்

சுழிபுரம், ஜன.26

சுழிபுரம் விக்டோரியா கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி எஸ்.சிவகுமார் தலைமையில் இடம் பெறும்.

முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.காண்டீபனும், சிறப்பு விருந்தினராக எஸ்.தவராஜாவும், கௌரவ விருந்தினராக கே.விநோதனும் கலந்து கொள்வர். (ச-21)

★★★

கொடிகாமம், ஜன.26

கொடிகாமம் கெற்பேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்தராசாவும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் த.கந்தையாவும் கலந்து கொள்வர். (ச)

# 2,477 கிலோ போதைப்பொருள் கடந்த ஆண்டில் மட்டும் மீட்பு!

### சுங்கத் திணைக்களம் கூறுகிறது

கொழும்பு, ஜன.26

கடந்த ஆண்டில் 2 ஆயிரத்து 477 கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள்களை சுங்கத் திணைக்களப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்ட போதைப் பொருளின் மொத்தப் பெறுமதி 18 ஆயிரத்து 556 மில்லியன் ரூபா என்று சுங்கத் திணைக்களத்தின்பணிப்பாளர்நாயகம் சூளானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

மீட்கப்பட்டவற்றில் ஆயிரத்து 230 கிலோ கிராம் கொகையின் போதைப் பொருளும், 8.83 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 5.41 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளும், ஆயிரத்து 232 கிலோ கிராம் எடையுடைய போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 49 கிலோ கிராம் எடையுடைய தங்கமும் மீட்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

### கலாசார அலுவல்கள் திணைக்கள

# ஓவிய, சிற்பக் கண்காட்சிக்கு ஆக்கங்கள் அனுப்ப முடியும்

கொழும்பு, ஜன.26

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப் படும் இவ்வாண்டுக்கான அரச ஓவிய சிற்பக் கண்காட்சி விழா மற்றும் அரச சிறுவர் ஓவிய விழாவுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கை யிலுள்ள ஓவியக் கலைஞர்களின் ஆக்கத்திறன்களையும் படைப்புக்களையும் மதிப் பிட்டு முதன்மை அரச ஓவிய விழாவில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை இதன் மூலம் வழங்குகின்றது.

இந்த ஆக்கங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இது தொடர்பான மேலதிக தகவல்களை www.culturaldept.gov.lk என்ற இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதற்கு மேலதிமாக மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகத்திலும் உள்ள கலாசார அதிகாரிகளிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று கலாசார அலுவல்கள் பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (எ)

# நாடக பயிற்சிப் பட்டறையும் பாடல் போட்டியும் சனியன்று


யாழ்ப்பாணம், ஜன.26

யாழ்.ராகஸ்வரம் இசைமன்றத்தின் ஏற்பாட்டில் நாடக பயிற்சிப் பட்டறையும் பாடல் போட்டியும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை குரல் தேர்வுக்கான பாடல் போட்டியும் நடைபெறும்.

நிகழ்வில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் குறித்த நேரத்தில் சமுகமளிக்கலாம் என்று ராகஸ்வரம் இசைமன்றப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

# நுகேகொடை கூட்டத்துக்கு அமைச்சர்களை வரவேண்டாம் என்கின்றார் மஹிந்தர்!



கொழும்பு, ஜன.26

நாளை நுகே கொடையில் இடம்பெற வுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ளவிருந்த- தற்போது அரசுடன் உள்ள- அமைச்சர்கள் எவரும் அன்றைய தினம் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று தான் ஆலோசனை வழங்கியுள்ளார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்ஸவுக்கு 3 மாதம் வரை பிணை வழங்குவதில்லை என்று அமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார். இதன் மூலம் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது நீதிமன்றத்தாலா அல்லது அமைச்சர்களாலா என்பது தெளிவாகின்றது.

இதேபோன்று நாளை நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்கும் அமைச்சர்களின் பிள்ளைகளும் சிறை செல்ல வேண்டி ஏற்படும் என்று அமைச்சர் ஒருவர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்.

அரசியல்வாதிகள் கஷ்டப்படுவது பிரச்சினையில்லை. ஆனால், அவர்களின் பிள்ளைகள் கஷ்டப்படக் கூடாது என்பதால் நுகேகொடைக் கூட்டத்தில் கலந்துகொள்ள இருந்தவர்களைப் பங்கேற்க வேண்டாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளேன்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக அனைத்துப் போராட்டங்களையும் தொடர்ந்து மேற்கொள்வோம் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கூறியுள்ளார். (ஒ)

# ஹஜ் விசாரணைக் குழுவுக்கு புதிய தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி

கொழும்பு, ஜன.26


ஹஜ் முகவர்களுக்கு எதிராக ஹஜ் கடமையை நிறைவேற்றியவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான குழுவின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி யு.எல்.எம்.மஜீட் நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் இவ்வாரம் கையளிக்கப்படும் என்று அரச ஹஜ் குழுவின் தலைவர் கலாநிதி மொஹமட் தாஹா சியாத் தெரிவித்தார்.

ஹஜ் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் குழுவின் தலைவராகக் கடமையாற்றிய ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.டபிள்யூ. ஏ.சலாம் தனது பதவியை வேலைப்பளு காரணமாக ராஜினாமாச் செய்தமையை அடுத்தே அவ்விடத்துக்கு ஓய்வு பெற்ற நீதிபதி யூ.எல். எம். மஜீட் நியமிக்கப்படவுள்ளார். ஹஜ் முகவர்களுக்கு எதிராக ஹஜ்ஜாஜிகளால் சுமார் 20 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் விசாரணைக்குழு முறைப்பாடுகளை விசாரித்து குற்றவாளிகளாகக் காணப்படும் ஹஜ் முகவர்களுக்கான தண்டனை பரிந்துரை செய்யும் என அவர் மேலும் கூறினார்.

# தமிழகத்தில் இந்தியாவின் குடியரசு தின பாதுகாப்புப் பணியில் 15 லட்சம் பொலிஸார்

## ஏறுதழுவுதல் போராட்டத்தின் எதிரொலி



இன்றைய குடியரசு தின நிகழ்வில் ஆளுநர் கொடியேற்ற உள்ள மெரீனா காந்தி சிலை அருகே அமைக்கப்படும் மேடைக்கான பொருட்களை பொலிஸார் சோதனையிடுகின்றனர்.

சென்னை, ஜன.

இன்று இந்தியாவின் குடியரசுத் தினமாகும். இதனை முன்னிட்டு பாதுகாப்புப் பணியில், தமிழகத்தில் 15 லட்சம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் குடியரசு தின விழா இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட உள்ளது.

இந்நிலையில், விழாவில் ஏதேனும் அசம்பாவிதச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகப் பொலிஸார் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகயை எடுத்துள்ளனர்.

ஆகவே, தமிழகத்தில் சுமார் 15 லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். முக்கியமாக பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், தினசரி சந்தைகள், வழிப்பாட்டு ஸ்தலங்கள் ஆகியவற்றில் பொலிஸார் தீவிர ரோந்து, கண்காணிப்பு பணிகளில் கடந்த இரு நாள்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல் முக்கியமான வீதிகள், முக்கிய சக்திகள் ஆகியவற்றில் பொலிஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தனியார் தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள் ஆகியவற்றில் பொலிஸார் திடீர் சோதனை செய்து, அங்கு தங்கியிருப்பவர்கள் குறித்தத கவல்களை திரட்டியுள்ளனர்.

மேலும் ஒவ்வொரு மாவட்ட நிர்வாகம் சார்பில் குடியரசு தின விழா நடைபெறும் மைதானங்கள் வெடிகுண்டு தடுப்புப் பிரிவு பொலிஸாரால் அடிக்கடி சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த மைதானங்கள் நேற்று முதல் முழுமையாகப் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

சென்னையில் இதுவரை இல்லாத வகையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

15 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். பிரச்சினைக்குரிய பகுதிகள் எனக் கண்டறியப்பட்ட இடங்களில் கூடுதலாக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மெரினா கடற்கரையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஏறுதழுவுதலுக்கான போராட்டம் முடிவடைந்த பின்னரும், காமராஜர் வீதியில் போக்குவரத்து அனுமதிக்கப் படவில்லை.

போராட்டத்தின் காரணமாக இரு நாள்கள் நடைபெறும் ஒத்திகை நிகழ்ச்சி தடைப் பட்டு விட்டதால், காமராஜர் வீதியில் நேற்று முழுவதும் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. இதற்காக நேற்று காமராஜர் வீதியில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருக்கிறது.

மேலும், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றவன்முறைச் சம்பவத்தில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த சில சமூக விரோதிகளும், ஈடுபட்டனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்நிலையில், அவர்கள் குடியரசு தினத்தன்று வன்முறை சம்பவத்தை தூண்டிவிடாமல் இருப்பதற்குரிய நடவடிக்கைகளைத் தமிழக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரத்தில் ஏறுதழுவுதல் நடத்துவதற்கு ஏற்பாடுகள் தீவிரம்!

## ஆயிரத்து 500 காளைகளுக்குத் தீவிர பயிற்சிகள்

டில்லி, ஜன.29

அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் போன்ற இடங்களில் ஏறுதழுவுதல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இந்த ஏறுதழுவுதல் போட்டிகளில் பங்கேற்கும் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட காளைகளுக்கு விசேஷ பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



தமிழகத்தில் உச்ச நீதிமன்ற தடையால் 2 ஆண்டுகளாக ஏறுதழுவுதல் விளையாட்டு நடக்கவில்லை. இந்த ஆண்டும் உச்ச நீதிமன்றம் தடையை நீக்க மறுத்ததால் பொங்கலையொட்டி ஏறுதழுவுதல் நடத்த வாய்ப்பில்லாமல் போனது.

ஆனால், பொங்கலுக்கு மறுநாள் 16 ஆம் திகதி அலங்காநல்லூர் கிராம மக்கள் உச்ச நீதிமன்றத் தடையை மீறி ஏறுதழுவுதல் நடத்த முயற்சி மேற்கொண்டனர்.

பொலிஸார் தடுத்தமையால் அவர்களுக்கு ஆதரவாக அங்கு மாணவர்கள் திரண்டனர். அதனால் தடியடி, வாடிவாசல் முற்றுகை, மறியல் எனக் கடந்த 8 நாள்களாக ஏறுதழுவுதல் போராட்டம் அலங்காநல்லூர் முதல் தமிழகம் முழுவதும் பரவியது.

அதைத் தொடர்ந்து தமிழக அரசு அவசரச் சட்டம் நிறைவேற்றி ஏறுதழுவுதல் நடத்த அனுமதி வழங்கி 22 ஆம் திகதி தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடங்கி வைக்க ஏற்பாடுகளும் நடந்தன.

மறுநாள் பாலமேட்டிலும், நேற்று 25 ஆம் திகதி அவனியாபுரத் திலும் ஏறுதழுவுதல் நடத்த அரசு முயற்சி மேற்கொண்டது. ஆனால், நிரந்தரச் சட்டம் கோரி முதல்வரை அலங் கா நல்லூர் ஊருக்குள் விட மக்கள் மறுத்ததால் ஏறுதழுவுதல் ரத்து செய்யப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை அலங்காநல்லூர் மட்டுமல்லாது தமிழகம் முழுவதுமே பொலிஸார் அதிரடியாகப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

அதைத் தொடர்ந்து அலங்காநல்லூரில் பெப்ரவரி முதலாம் திகதி பாலமேட்டில் பெப்ரவரி 2 ஆம் திகதி, அவனியாபுரத்தில் 5 ஆம் திகதியும் ஏறுதழுவுதல் நடத்தப்படும் என்று அறிவித்து சம்பந்தப்பட்ட ஊர் நிர்வாகிகள் அதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாகியுள்ளனர்.

அலங்காநல்லூரில் கடந்த 8 நாள்களுக்கு பிறகு நேற்று முன்தினம் இயல்பு நிலை திரும்பியதால் ஏறுதழுவுதல் விளையாட்டுக்கு காளைகளை தயார்ப்படுத்தத் தொடங்கிவிட்டனர். பாலமேடு, அவனியாபுரத்திலும் ஏறுதழுவுதல் ஏற் பாடுகளில் அந்த ஊர் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் கடந்த காலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளைகள் இருந்தன.

2006 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏறுதழுவுதலுக்கு உச்ச நீதிமன்ற நெருக்கடியால் காளைகள் எண்ணிக்கை குறைந்தன.

தற்போது ஏறுதழுவுதல் ஏற்பாடுகள் தொடங்கிவிட்டமையால் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் சுற்றுவட்டாரக் கிராமங்களில் வளர்க்கப்படும் 500 இற்கும் மேற்பட்ட காளைகளை நேற்று முன்தினம் முதல் ஏறுதழுவுதலுக்கு தயார் செய்யத் தொடங்கினர். அதனால், தென் மாவட்ட கிராமங்களில் தற்போது ஏறுதழுவுதல் உற்சாகம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

# ஏறுதழுவுதலுக்கு எதிரான மனுப்போர் நேற்று ஆரம்பம்!



புதுடில்லி, ஜன.26

ஏறுதழுவுதல் தொடர்பாகத் தமிழக அரசு நிறைவேற்றியுள்ள சட்டத் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்திய விலங்குகள் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்துள்ளன.

தமிழகத்தில் ஏறுதழுவுதல் நடத்துவதற்கு ஏற்ப மிருகவதை தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டத் திருத்தப் பிரேரணை, சட்டப் பேரவையில் கடந்த திங்கட்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தமிழக அரசு மிருகவதை தடுப்புச் சட்டத்தில் கொண்டுவந்த திருத்தத்தை எதிர்த்து இந்திய விலங்குகள் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளன.

தமிழக அரசின் சட்ட திருத்தத்துக்கு எதிரான மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு, எதிர்வரும் திங்கட்கிழமையன்று விசாரணை நடைபெறும் எனத் தெரிவித்துள்ளது.

விலங்குகள் நல வாரியம் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் மனு சிங்வி, ஆனந்த் குரோவர் உள்ளிட்டோர் ஆஜராகியுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் ஏறுதழுவுதல் தொடர்பாக மத்திய அரசு பிறப்பித்த அறிவிப்புகள் வாபஸ் பெறப்படும் என்று உச்சநீதிமன்றத்தில் அட்டார்னி ஜெனரல் முகுல் ரோத்கி தெரிவித்திருந்தார்.

மத்திய அரசின் இந்த அறிவிப்பு வெளியான மறுநாளே விலங்குகள் நல வாரியம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறது.

இதற்கிடையில், ஏறுதழுவுதல் தொடர்பாக யாரேனும் வழக்குத் தொடர்ந்தால் தமிழக அரசைக் கேட்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது என உச்ச நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு மட்டுமல்லாது ஏறுதழுவுதல் ஆர்வலர்கள் சார்பில் 70 கேவியட் மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே, ஏறுதழுவுதல் சட்ட திருத்தத்தை எதிர்த்து விலங்குகள் நல வாரியம் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

## ஐ.எஸ். இயக்கத்தை அழிக்க ட்ரம்ப் ஒத்துழைக்கத் தயார்



வொஷிங்டன், ஜன.26

சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தை அழிப்பதற்கு யாருடன் வேண்டுமானாலும் இணைந்து ஒத்ழைக்கத் தயாராகத் தாம் இருக்கிறார் என ட்ரம்ப் தெரிவித்துள்ளது.

இது குறித்து அவரது வெள்ளை மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

''ஐ.எஸ். அமைப்பை அழிப்பதற்கு அமெரிக்கா எந்த நாட்டுடனும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறது. அந்த நாடு ரஷ்யாவாக இருந்தாலும் சரி, வேறு எந்த நாடாக இருந்தாலும் சரி அமெரிக்கா தனது ஒத்துழைப்பை அளிக்கும்.''- என்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தை அழிப்பதற்காக நடத்தப்பட்டு வரும் வான்வழித் தாக்குதலில், அமெரிக்காவும் இணையவுள்ளது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்தியை அமெரிக்க இராணுவத் தளமான பென்டகன் மறுத்திருந்த நிலையில் தற்போது ட்ரம்ப் நிர்வாகம் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலக நாடாளுமன்ற ஆலோசனை பெறுவது அவசியம்

### அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

லண்டன், ஜன.26

ஐரோப்பிய ஒன்றியத் திலிருந்து பிரிட்டன் விலகுவது தொடர்பான நடவடிக்கைகளை அரசு ஆரம்பிக்கும் முன்னர், அது குறித்து நாடாளுமன்றத்தின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகும் போது பிரிட்டன் சட்டத்தில் சில மாறுதல்கள் ஏற்படும் என்பதுடன் அந்தநாட்டு மக்கள் சில உரிமைகளை இழப்பார்கள் என்பதனாலும் நாடாளுமன்றத்தில் இந்த விடயம் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

11 நீதிபதிகள் அடங்கிய முழு அமர்வு இந்த வழக்கை விசாரித்ததில் 8 நீதிபதிகள் நாடாளுமன்ற ஒப்புதல் தேவை என்றும், மூவர் தேவையில்லை என்றும் தீர்ப்பளித்தனர்.

எனினும், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கான நடைமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்திலோ அல்லது வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து சட்டமன்றங்களிலோ விவாதிக்கத் தேவையில்லை என்று அனைத்து நீதிபதிகளும் ஒருமித்துத் தெரிவித்துள்ளனர்.

எனினும், பிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவது எனும் முடிவுக்கு சில உறுப்பினர்கள் எதிராக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் ஜூன் மாதம் ஐரோப்பிய ஒன்றி யத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமா என்பது தொடர்பில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில், விலக வேண்டும் எனும் கருத்து வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (எ)

## சட்டவிரோத குடியேறிகளுடன் சென்ற படகு கவிழ்ந்ததில் 10 பேர் உயிரிழப்பு!




கோலாலம்பூர், ஜன.26

சட்டவிரோதமாகப் பயணித்த படகு ஒன்று மலேசியா எல்லையில் நடுக்கடலில் கவிழ்ந்ததில் 6 பெண்கள், 4 ஆண்கள் என 10 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவைச் சேர்ந்த மக்கள் சிலர் வேலைக்காக அண்டை நாடான மலேசியாவுக்குச் சட்ட விரோதமாகக் குடியேறி வருகின்றனர். அவர்கள் கடல் வழியாக சட்டவிரோதமாகப் படகுகளில் பயணம் செய்து மலேசிய எல்லைக் குள் நுழைகின்றனர். இது போன்ற பயணங்கள் சில நேரங்களில் விபத்தில் முடிந்து விடுகின்றன.

இந்தநிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தோனேசியாவில் இருந்து சுமார் 40 இற்கும் மேற்பட்டோர் படகு ஒன்றில் மலேசியாவுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

இந்தப் படகு நடுக் கடலில் சென்று கொண்டிருந்த போது திடீரெனக் கவிழ்ந்து மூழ்கியது. இதில் 6 பெண்கள், 4 ஆண்கள் என 10 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களது உடல்கள் நேற்று முன்தினம் மலேசியாவின் ஜோஹோர் மாகாணத்தில் மெர்சிங் கடற்கரையில் கரைஒதுங்கின.

மேலும் சுமார் 30 பேரைக் காணவில்லை. அவர்களது கதி என்ன? என்பது தெரியவில்லை. அவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இந்தநிலையில், 2 பேர் மட்டும் உயிருடன் மீட்கப்பட்டனர். அவர்கள் மிகுந்த களைப்படைந்தமையால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். படகில் அளவுக்கு அதிகமான நபர்களை ஏற்றிவந்த மையே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (எ)

## ஐநாவுக்கான அமெ.தூதராக நியமிக்கப்படுகிறார் இந்தியர்

### செனட் குழுவின் ஒப்புதல் கிடைத்தது



வொஷிங்டன், ஜன.26

ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதராக அமெரிக்க வாழ் இந்தியர் நிக்கி ஹேலி நியமிக்கப்படுவதற்கு அந்த நாட்டின் செனட் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அமைச்சர் பதவி உள்ளிட்ட முக்கிய நியமனங்கள் அறிவிக்கப்பட்டு வந்தன.


இந்தநிலையில் முதலாவது நியமனமாக, ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதர் பதவிக்கு அமெரிக்க வாழ் இந்தியர் நிக்கி ஹேலி (வயது44) பெயர் அறிவிக் கப்பட்டது.

தற்போது ட்ரம்ப் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள நிலையில், ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதராக நிக்கி ஹேலி நியமிக்கப்படுவதற்கு அந்த நாட்டின் செனட் குழு ஒப் புதல் அளித்துள்ளது.

ஹேலியின் நியமனத் துக்கு அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் பெரும ளவில் வரவேற்பு தெரிவித் துள்ளனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதி நிர்வாகத்தில் முதல் முறையாக பங்கு பெறும் அமெரிக்க வாழ் இந்தியர் ஹேலி என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### ட்ரம்பின் உருவம் பொறித்த நாணயம் ரஷ்யாவில் வெளியீடு !




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் உருவம் பொறித்த நாணயத்தை ரஷ்ய நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றமையை வரவேற்கும் வகையில் இந்த நாணயம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ எடை கொண்ட இந்த வெள்ளி நாணயத்தில் ட்ரம்பின் உருவமும், அவர் பதவி ஏற்றுக் கொண்ட தினமான ஜனவரி 20ஆம் திகதியும் பொறிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஐரோப்பாவில் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்த ஐ.எஸ்.திட்டம்

### அதன் முக்கிய இலக்கு ஜேர்மனி

ஐரோப்பிய கண்டத்துக்கு வழங்கப்படும் தண்ணீரில் தீவிரவாதிகள் இரசாயனக் கலவைகளைப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

ஜேர்மன் தலைநகரான பேர்ளினில் கடந்த டிசெம்பர் மாதம் கிறிஸ்மஸ் சந்தை யில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 12 பேர் பலியாகினார், 56 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை மையமாகக் கொண்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் இரசாயன ஆயுதங்களைக் கொண்டு ஜேர்மனியில் தாக்குதல் நடத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அதற்காக ஆய்வுப்படைகள், உளவுத் துறைகள் மற்றும் அவசர சேவைகள் போன்றவை உடனடி நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக உள்ளன என்றும் கூறப்படுகிறது.

மேலும் ஜேர்மனியில் ஒரு நன்கு பயிற்சி பெற்ற தீவிரவாத குழு ஜேர்மன் மீது இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு தயாரக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. அவர்கள் தண்ணீர் மாசு படுத்துதல், நாட்டில் அதிக அளவு தண்ணீர் செல்லும் தாங்கிகளில் இரசாயனங்களைக் கலக்குதல் மற்றும் கட்டடங்களுக்குச் செல்லும் தண்ணீர்த் தொட்டிகள் என பலவற்றை குறிவைத்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (எ)

## சோமாலியா தலைநகரிலுள்ள விடுதி மீது கார்க் குண்டுத் தாக்கு





மொகடிஷ், ஜன.26

சோமாலியா தலைநகர் மொகடிஷுவில் உள்ள பிரபல விடுதி ஒன்றின் மீது நேற்று அல் ஷபாப் தீவிரவாதிகள் நடத்திய கார்க் குண்டு மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 7 பேர் பலியாகினர்; சிலர் காயம் அடைந்தனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் நடைபெற்று வரும் ஆட்சியை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அல் ஷபாப் தீவிரவாதிகள், இங்கு பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் கென்யா, ஜிபோட்டி, உகண்டா, எத்தியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கூட்டுப் படையினரைக் குறிவைத்தும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்ற னர்.

இந்தநிலையில், மொகடிஷுவில் உள்ள பிரபல விடுதி ஒன்றின் மீது நேற்று அல்ஷபாப் தீவிரவாதிகள் நடத்திய கார்க் குண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் 7 பேர் பலியாகினர். காயமடைந்த சிலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)






வடமாகாண சபையின் விவசாய அமைச்சால் வழங்கப்பட்ட மரக்கன்றுகளை குருநகர் சென்.றோக்ஸ் சனசமூக நிலைய யோகம் கலையரங்க முன் பகுதியில் நடப்பட்டபோது... (இ)



சாவகச்சேரி மட்டுவில் பிரதேசத்தில் பன்னிரண்டு முன்பள்ளிகள் ஒன்றிணைந்து நடத்திய மட்டுவில் குடும்ப முன்பள்ளிகளுக்கான கலை நிகழ்வு மற்றும் பரிசளிப்பு விழா அண்மையில் மட்டுவில் சந்திர மௌலிச வித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார். (ஐ-21)




வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் கடந்த ஆண்டின் திட்டங்கள் தொடர்பான மீளாய்வும் 2017 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலும் மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன. கலந்துரையாடலை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தலைமையேற்று நடத்தினார். (ஐ)



வடமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவால் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாணசபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் வவுனியா நொச்சிக்குளம் பாடசாலையில் வறிய மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.(ஐ-21)



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவின் முதலாவது கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலையின் அருணாசலம் மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது கல்லூரியின் வளர்ச்சி, அபிவிருத்தி பற்றி கலந்துரையாடப் பட்டது. (ஐ-21)



மன்னார் பிரதேசத்துக்கு உட்பட்ட ஜோசப்வாஸ் நகரில் வசித்துவரும் நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் பாடசாலைக் கல்வியை மேற்கொள்கின்றனர். ஒருவர் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளார்.

இவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அமைச்சர் பா.டெனிஸ்வரன் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண நிதியில் இருந்து உதவிகளை வழங்கியுள்ளார். (ஐ)





வவுனியா தோணிக்கல் கிராமத்தில் அமைந்துள்ள முன்பள்ளிக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் 2016 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து சிறுவர் பூங்கா ஒன்று அமைத்துக் கொடுத்துள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராக காதர் மஸ்தான் கலந்து கொண்டு பூங்காவைத் திறந்து வைத்தார். (ஐ-21)

# இலங்கை அணியின் புதிய தலைவரானார்

# உபுல் தரங்க!




கொழும்பு, ஜன.26

எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள தென்னாபிரிக்கா அணியுடனான 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளைக் கொண்ட தொடருக்கு தற்காலிக அணித் தலைவராக உபுல் தரங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை தேசிய கிரிக்கெட் தெரிவுக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தென்னாபிரிக்க சுற்றுபயணத்துக்கு அணித் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த அஞ்சலோ மத்தியூஸ் நடந்து முடிந்த இரண்டாவது இருபது 20 போட்டியின் போது ஏற்பட்ட தசை பிடிப்பு உபாதை மற்றும் சில தனிப்பட்ட காரணங்களுக்காகவும் அணியிலிருந்து விலக நேரிட்டது.

அதனை தொடர்ந்து தினேஷ் சந்திமால் அணித் தலைவராக பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மூத்த வீரர் மற்றும் அதிக அனுபவம் என்பவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உபுல் தரங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், உபுல் தரங்க, கடந்த ஸிம்பாப்வே மற்றும் மேற்கிந்திய அணிகளுடனான மும்முனை போட்டித் தொடரில் இளம் வீரர்களைக் கொண்ட இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு வழி நடத்தியிருந்தார்.

அதேநேரம் ஒருநாள் போட்டிகளுக்காக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்க மற்றும் வேகப் பந்து வீச்சாளர் நுவன் பிரதீப் காயம் காரணமாக இந்த வார ஆரம்பத்தில் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர்.

மேலும், இடது கை சுழல் பந்து வீச்சாளர் மற்றும் சகலதுறை ஆட்டக்காரர் சதுரங்க டி சில்வா மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இலங்கை அணி சார்பாக 6 போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள அவர், 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இருபதுக்கு 20 உலக கிண்ணப் போட்டிகளில் லசித் மலிங்கவின் தலைமையில், சம்பியன் பட்டத்தை சுவீகரித்திருந்த இலங்கை அணியில் இடம் பிடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த பருவக்காலத்துக்காக என்.சி.சி. கழகத்திலிருந்து சோனகர் விளையாட்டுக் கழகத்துக்கு மாறிய அவர் 6 போட்டிகளில் 35 விக்கெட்டுகளையும் 50.90 சராசரியில் 560 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

அத்துடன், 23 வயது நிரம்பிய என்.சி.சி. கழகத்தின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சந்துன் வீரக்கொடி முதல் தடவையாக அணிக்குள் பெயரிடப்பட்டுள்ளார்.

மேலும், கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வேகப்பந்து வீச்சாளர் மற்றும் சகல துறை ஆட்டக்காரர் லஹிறு மதுஷங்கவும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

நடைபெற்று வரும் இலங்கை கிரிக்கெட் பிரிமியர் லீக் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி வரும் சந்துன் வீரக்கொடி 6 போட்டிகளில் 100 விகித துடுப்பாட்ட வேகத்தில், இரண்டு சதங்கள் மற்றும் ஒரு அரை சதம் உள்ளடங்கலாக 530 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

மாத்தளை, புனித தோமையர் கல்லூரியை சேர்ந்த மதுஷங்க, 27 லிஸ்ட் 'ஏ' போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். இவர் அண்மையில் நடந்து முடிந்த நான்கு நாட்களை கொண்ட சூப்பர் 8 போட்டியில் துடுப்பாட்டத்தில் 164 ஓட்டங்களையும் தனது பந்து வீச்சின் மூலம் 7 விக்கெட்டுகளையும் வீழ்த்தி திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார். இருபதுக்கு இருபது போட்டிகளில் நிபுணத்துவம் வாய்ந்த இசுரு உதான, சீக்குகே பிரசன்ன மற்றும் திக்ஷில டி சில்வா ஆகியோர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் மூன்று இருபதுக்கு 20 போட்டிகளை கொண்ட தொடர் முடிவுற்றவுடன் நாடு திரும்பவுள்ளனர்.

இலங்கை ஒருநாள் சர்வதேச அணியின் விவரம் வருமாறு:-

உபுல் தரங்க (அணித் தலைவர்), தினேஷ் சந்திமெல்ல, நிரோஷன் திக்வெல்ல, தனஞ்சய டி சில்வா, குசல் மெண்டிஸ், சந்துன் வீரக்கொடி, அசேல குணரத்ன, சச்சித் பத்திரண, லக்ஷான் சந்தகன், சதுரங்க டி சில்வா, ஜெப்ரி வண்டர்சே, லஹிரு மதுஷங்க, லஹிரு குமார, விகும் சஞ்சய, சுரங்க லக்மால், நுவன் குலசேகர.





## அரையிறுதியில் செரீனா!

மெல்பேர்ன், ஜன.26

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் 6-2, 6-3 என்ற நேர்செட் கணக்கில் ஜோகன்னா கோன்டாவை வீழ்த்தி அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.



உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையும், ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை 6 முறை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) இன்று நடந்த கால் இறுதியில் 9 ஆம் நிலை வீராங்கனை ஜோகன்னா கோன்டாவை (இங்கிலாந்து) எதிர்கொண்டார்.

இதில் செரீனா வில்லியம்ஸ் 6-2, 6-3 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று அரை இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

அவர் ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் 8 ஆவது தடவையாக அரை இறுதிக்கு முன்னேறி உள்ளார்.

## ஸிம்பாப்வே அணியுடனான போட்டியில் 240 ஓட்டங்களால் இலங்கை வெற்றி!

பிரிட்டோரியா, ஜன.26

தென்னாபிரிக்காவில் இலங்கை, ஸிம்பாப்வே, தென்னாபிரிக்கா அணிகள் மோதும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் ஸிம்பாப்வேயுடன் மோதிய இலங்கை அணி 240 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

முதலில் களமிறங்கிய இலங்கை அணி 45 ஓவர்களின் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய அவிஷ்கா பெர்னாண்டோ, விஷ்வா



சதுரங்க ஜோடி சிறப்பாக விளையாடி இணைப்பாட்டமாக 191 ஓட்டங்களை குவித்தனர்.

க்ரிஷன் ஆராச்சிகே 68 பந்துகளில் 2 ஆறு ஓட்டம், 5 நான்கு ஓட்டம் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

304 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய ஸிம்பாப்வே அணி வீரர்கள் இலங்கை அணி வீரர்களின் அபார பந்து வீச்சுக்களை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடினர்.

இலங்கை அணி சார்பில் டி சில்வா 3 விக்கெட்டுகளையும், ஜய விக்ரம, வீரசிங்க, மிஷேன் சில்வா ஆகியோர் தலா 2 விக்கட்டுகளையும் வீழ்த்தினர்.

இலங்கை அணி வீரர்களின் அபார பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாத ஸிம்பாப்வே வீரர்கள் 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 63 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டனர்.

டேனியல் ஸ்விட்ஷை அதிகபட்ச ஓட்டமாக 11 ஓட்டங்களைப் பெறுக் கொடுத்தார்.

# இன்றைய முதலாவது இருபதுக்கு 20 போட்டியிலும்

## இந்தியாவின் ஆதிக்கம் நீடிக்குமா?

இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் முத்திரை பதித்த விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி இன்று இடம்பெறவுள்ள இருபதுக்கு 20 போட்டியிலும் ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 ஒருநாள் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஏற்கனவே நவம்பர், டிசெம்பர் மாதங்களில் இடம்பெற்ற இங்கிலாந்துக்கு எதிரான 5 டெஸ்ட் கொண்ட தொடரை 4-0 என்ற கணக்கில் இந்திய அணி வென்று இருந்தது.

அடுத்து இரு அணிகள் இடையே இருபதுக்கு 20 போட்டி நடைபெறுகிறது.



இந்தியா-இங்கிலாந்து இடையேயான மூன்று 20 ஓவர் போட்டி தொடரில் முதல் ஆட்டம் கான்பூரில் இன்று இடம்பெறுகிறது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் முத்திரை பதித்த விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி 20 ஓவர் போட்டியிலும் ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விராட் கோஹ்லி, டோனி, யுவராஜ்சிங், ஹர்த்திக் பாண்டியா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். ஒருநாள் போட்டியில் தொடக்கம் சரியாக அமையவில்லை. ராகுலும், தவானும் ஏமாற்றம் அளிக்கும் வகையில் ஆடினார்கள். இதில் தவான் இருபதுக்கு 20 போட்டியில் இடம் பெறவில்லை. இதனால் இன்றைய போட்டியில் ராகுலுடன் மனிஷ் பாண்டே தொடக்க வீரராக இடம்பெறலாம்.

ஒருநாள் தொடரில் அதிரடியாக விளையாடிய கேதர் ஜாதவ் இருபதுக்கு 20 அணிக்கு தேர்வு செய்யப்படவில்லை. சுரேஷ் ரெய்னா அவர் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

முன்னணி சுழற்பந்து வீரர் அஸ்வின், ஜடேஜாவுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. பர்வேஷ், அமித் மிஸ்ரா ஆகியோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. வேகப் பந்தில் புவனேஸ்வர் குமார், பும்ரா, ஆசிஷ் நெஹ்ரா உள்ளனர்.

கொல்கத்தாவில் இடம் பெற்ற கடைசி ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்று இருந்ததால் இங்கிலாந்து அணி மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது.

அணித்தலைவர் மோர்கன், ஜோரூட், ஜேசன் ரோய், பென் ஸ்டோக்ஸ், மொய்ன் அலி, ஹேல்ஸ், டேவிட் வில்லி, பட்லர் போன்ற சிறந்த வீரர்கள் இங்கிலாந்து அணியில் உள்ளனர்.

மேலும், அந்த அணி கடைசியாக இந்தியாவுக்கு எதிராக விளையாடிய கடைசி இரண்டு இருபதுக்கு 20 போட்டியிலும் வெற்றி பெற்று இருந்தது. இதனால் அந்த அணி இருபதுக்கு 20 தொடரையாவது வென்று விட வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கிறது.

இங்கிலாந்துக்கு எதிராகத் தான் யுவராஜ்சிங் 6 பந்துகளில் 6 சிக்சர்களை அடித்து முன்னர் முத்திரை பதித்திருந்தார். இதனால், அவரது அதிரடி ஆட்டத்தை காணும் ஆர்வத்தில் ரசிகர்கள் உள்ளனர்.

இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என்பதால் இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: அரையிறுதியில் சானியா ஜோடி

மெல்போர்ன், ஜன.26

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் சானியா மிர்சா, குரோஷியாவின் இவான் டோடிக் ஜோடி முன்னேறியுள்ளது.

மெல்போர்னில், ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் இடம்பெற்று வருகிறது. இதன் கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா, குரோஷியாவின் இவான் டோடிக் ஜோடி, இந்தியாவின் ரோகன் போபண்ணா, கனடாவின் காப்ரிலா டப்ரோவ்ஸ்கி ஜோடியை சந்தித்தது.

முதல் செட்டை சானியா ஜோடி 6-4 எனக் கைப்பற்றியது. பின் எழுச்சி கண்ட போபண்ணா ஜோடி, 2 ஆவது செட்டை 6-3 என தன்வசப்படுத்திப் பதிலடி கொடுத்து. வெற்றியாளரை நிர்ணயிக்கும் 'சூப்பர் டை பிரேக்கர்' சுற்றில் அசத்திய சானியா ஜோடி 12-10 என வென்றது.

முடிவில், சானியா-டோடிக் ஜோடி 6-4, 3-6, 12-10 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை, ஜூனியர் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் இந்தியாவின் ஜீல் தேசாய், செர்பியாவின் ஆல்கா டானிலோவிச் மோதினர். இதன் முதல் செட்டில் ஜீல் தேசாய் 3-5 என பின்தங்கி இருந்த போது, டானிலோவிச் காயம் காரணமாக விலகுவதாக தெரிவித்தார்.

இதனையடுத்து ஜீல் தேசாய் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, அவர் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார்.



## ஸ்ரீசாந்துக்கு தடையில்லா சான்றிதழ் வழங்க மறுப்பு!

சென்னை, ஜன.26

ஐ.பி.எல். சூதாட்டத்தில் கைது செய்யப்பட்ட இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்துக்கு தடையிலான சான்றிதழ் வழங்க பி.சி.சி.ஐ. மறுத்துள்ளது.



இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரீசாந்த் ஐ.பி.எல். போட்டியின்போது ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டு எழுந்தது. இதனடிப்படையில் கடந்த 2013 ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டார். இதனால், பி.சி.சி.ஐ. ஒழுங்கு நடவடிக்கைக்குழு அவருக்கு ஆயுட்கால தடை விதித்தது.

பின்னர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை அடிப்படையில் கடந்த 2015 இல்அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால், பி.சி.சி.ஐ. அவர் மீதான தடையை நீக்கவில்லை. இந்நிலையில், மீண்டும் கிரிக்கெட் விளையாடுவதற்கு முன்னோட்டமாக ஸ்கொட்லாந்து கிரிக்கெட் லீக்கில் விளையாடுவதற்காக பி.சி.சி.ஐ.யிடம் என்.ஓ.சி. (தடையில்லா சான்றிதழ்) கேட்டு ஸ்ரீசாந்த் விண்ணப்பம் செய்திருந்தார் எனக் கூறப்படுகிறது.

ஆனால், பி.சி.சி.ஐ. அவருக்கு தடையில்லா சான்றிதழ் வழங்க மறுப்பு தெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது. இதனால் ஸ்கொட்லாந்து கிரிக்கெட் லீக்கில் ஸ்ரீசாந்த் விளையாடத் தடை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீசாந்த் இந்திய தேசிய அணிக்காக 27 டெஸ்ட், 53 ஒருநாள் மற்றும் 10 இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தவின் உயிருக்கு ஆபத்து!

## அபாயச் சங்கு ஊதுகிறார் உதய கம்மன்பில



கொழும்பு, ஜன.26

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்கு இந்தியப்புலனாய்வுப்பிரிவான றோவும், அமெரிக்காவும் முயற்சித்து வருகின்றன என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தியப் புலனாய்வுப் பிரிவான றோவின் கணிப்பின்படி நடக்கவிருக்கும்உள்ளூராட்சித் தேர்தலுக்கான அரசின் பலம் குறைந்து வருகின்றது.

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் அரசியலில் இருப்பதே அரசுக்குச் சவாலாக இருக்கிறது. அவர்மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வந்து அரசியலில் ஈடுபடுவார் என்று அரசு எதிர்பார்க்கவில்லை.

இதனால் மஹிந்த ராஜபக்ஷ அரசியலை விட்டு வெளியேறினால் நாமல்ராஜபக்ஷ, யோசித ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான வழக்குகளைத் தள்ளுபடி செய்யலாம்என இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது.

ஆனால் அதனை மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். இதனால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அமெரிக்கப்புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயும் இதில்தொடர்புபட்டுள்ளது.

தனது நாட்டின் ஜனாதிபதி என்று கூடப் பாராமல் ஜோன் கென்னடியை சி.ஐ.ஏ. கொலை செய்திருந்தது. எனவே அவர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷவைக் கொலைசெய்வது பெரிய விடயமல்ல.

மஹிந்த ராஜபக்ஷவே ஆட்சி செய்யக் கூடிய மாற்றுத் தலைவராவார். இவரைத் தவிர கூட்டு எதிரணியில் செயற்பாட்டுத் திறன்மிக்கவர்கள் வேறு யாரும் இல்லை. கூட்டு எதிரணியில் மஹிந்த ராஜபக்ஷ இல்லையேல் எமக்குப் பலமில்லை.

அதனால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் உயிரைப் பறிப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை என்றும் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்.

### மூளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தாக்கப்பட்டதால் மூளை சிதைவடைந்தமையே மரணத்துக்கான முக்கிய காரணமாகும்.

கழுத்தில் வெட்டுக்காயம் காணப்படுகின்றது. தோள் மற்றும் முதுகுப் ப்குதியில் எலும்புகள் முறிவடைந்துள்ளன எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (உ)

### முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் கைதுசெய்யப்படவில்லை.

"இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அவர்கள் முஸ்லிம்கள் அல்லர். முஸ்லிம்கள் கைதாகினர் என்ற செய்தி தவறானது."

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கட்சன் ஸ்ரனிஸ்லாஸ்.

"மேற்படிசம்பவம்தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இருவரும் சந்தேகநபர்களே. அவர்கள்தான் கொலைச் சூத்திரதாரிகள் என்பதை ஊர்ஜிதப்படுத்தும் விடயங்கள் இன்னும் கிடைக்கவில்லை. அவர்களின் உடலிலும் உடைகளிலும் இருந்து பெற்றுக் கொண்ட இரத்த மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. கொலையுண்ட பெண்ணின் இரத்த மாதிரியுடன் மரபணுச் சோதனை மூலம் அது ஒத்துப் பார்க்கப்படும்.

"அந்த இரத்தங்கள் ஒத்துப் போகா விட்டால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

"கொலைகாரர்களைத்தேடும் புலனாய்வு தொடர்கின்றது" - என்றும் அவர் கூறினார்.

**ஆசிரியர் குறிப்பு**

*"இரும்புகளைச் சேகரிப்பதற்காகச் சென்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முஸ்லிம் வியாபாரிகள் இருவரே இந்தக் கொலையைச்செய்தனர் என்று கூறப்படுகிறது. அவர்கள் இருவரும் மண்டைதீவுச் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்"*-எனநேற்றைய 'காலைக் கதிர்' இதழின் முன்பக்கத்தில் வெளியான செய்தி தவறானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தச்செய்தியால்சம்பந்தப்பட்டமக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ- ர்)

### கைதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் உததரவிட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சகோதரர்களான வட்டுக்கோட்டை பழைய நீதிமன்றத்தடி, கரம்பகம் என்ற இடத்தைச்சேர்ந்தநாகேந்திரன் துஷியந்திரன் (வயது -30), நாகேந்தின்துஷியந்தன் (வயது -32) ஆகியசகோதர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதவான் றியால் இந்த இருவரையும்விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

### ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2016 ஆண்டில் 175 நாடுகளுக்குள் இலங்கைக்கு 95 ஆவது இடமே கிடைத்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் 175 நாடுகளுக்குள் இலங்கைக்கு 85 ஆவது இடம் கிடைத்திருந்தன.

அரசாங்க அதிகாரத்தை தனிப்பட்ட நன்மைக்காக பயன்படுத்துவது இந்தத் தரவின் ஊடாகக் கணக்கிடப்படுகிறது.

உலகில் ஊழல் அற்ற நாடுகள் பட்டியலில் டென்மார்க் மற்றும் நியூஸிலாந்து முன்னணி வ்கிக்கின்றது.

உலகில் அதிக ஊழல் மிக்க நாடாக சோமாலியா நாடு காணப்படுவதாக அந்தப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளது.

தென்னாசியாவில் ஊழல் குறைந்த நாடாக இந்தியா சுட்டப்பட்டுள்ளது. அது 79 ஆறு இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்து 95 ஆவது இடத்தில் இலங்கையும் மாலைதீவும் உள்ளன.

### கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

32 வயதுடைய சுரேன் சிவானந்தன் என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். சடலத்தை அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இந்தப் படுகொலை தொடர்பில் 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

37 வயதான ஞானச்சந்திரன் பாலச்சந்திரன் மற்றும் 30 வயதுடைய கிரோராஜ் யோகராஜா ஆகியோரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளநபர்களைநீதிமன்றில் தாம் முன்னிலைப் படுத்த உள்ளனர் என அந் நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ)

## ரயில் மோதி ஒருவர் பலி!

கிளிநொச்சி, ஜன.26

நேற்று மாலை கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலும் ரயில்வேக் கடவையைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளும் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார்சைக்கிளில் சென்றவர் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-70,81)

### தெற்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்காக அடிக்கல் நாட்டும் வைபவம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெற உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு நிகழ்வுகள்நடைபெற்றால் நிகழ்வை நடக்க விடாது தடுத்து அவ்விடத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவோம்.

"நாவற்குழிப் பகுதியில் தற்போது 10இற்கும் குறைவான குடும்பங்களே குடியிருக்கின்றார்கள். ஆனால், 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பதிவுகளை மேற்கொண்டுவிட்டுத் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளன. அவர்களுக்கும் இங்கே வீடமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

"வடக்கில் பல குடும்பங்கள் வீடற்ற நிலையில் இருக்கும் போது தெற்கில் இருந்து வந்து பதிவுகளை மாத்திரம் மேற்கொண்டுவிட்டுத் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வசிக்கும் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தில் வீடமைத்துக் கொடுப்பதனைஏற்கமுடியாது." எனஎம்.கே.சிவாஜிலிங்கம்தெரிவித்தார். (ஒ)

## கடற்படைக்கு புதிய பேச்சாளர்

கொழும்பு, ஜன.26

கடற்படையின் புதிய ஊடகப் பேச்சாளராக லெப்டினன்ட் கொமாண்டர் சமிந்த வலாகுலுகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கடற்படையின் ஊடகப் பேச்சாளராக இதுவரை பணியாற்றி வந்த கப்டன் அக்ரம் அலவி நேற்றுடன் கடற்படைச் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இதனையடுத்தே லெப்டினட் கொமாண்டர் சமிந்த வலாகுலுகே கடற்படையின் புதிய ஊடகப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. (ஒ)

## திறப்பு விழா

காரைநகர், ஜன.26

காரைநகர் இந்துக் கல்லூரி விளையாட்டு அரங்கத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம் பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை கல்லூரியின் புதிய மைதானத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டி அன்றையதினம் பிற்பகல் 1.30 மணிக்கு, பிரதி அதிபர் திருமதி சிவநந்தினி வாகீசன் தலை மையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக சிறுவர் விவகார மற்றும் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலர் ஆர்.தயாரூபன், காரைநகர் பிரதேச கோட்டக் கல்வி அதிகாரி ஏ.குமரேசமூர்த்தி ஆகியோரும் கலந்துகொள்வர். (இ)

## சுமணரத்ன தேரரின் வழக்கு ஒத்திவைப்பு

அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் மட்டக்களப்புநீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்ட மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் மற்றும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி உப தலைவர் வி.பூபாலராஜா ஆகியோருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மே 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

மட்டக்களப்பில் இன ரீதியான பேச்சுக்களைப் பேசி அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டார்கள் எனத் தெரிவித்து இவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இதனை அடுத்து, கடந்த டிசெம்பர் 14 ஆம் திகதி இந்த வழக்கு மட்டக்களப்பு நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் மீண்டும் இந்த வழக்கு நேற்று புதன் கிழமைவிசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்ட போதே, நீதிவான் வழக்கை மே 29 திகதிக்கு ஒத்தி வைத்தார். (ச)

## தொண்டராசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.26

வடமாகாண தெண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழன் முற்பகல் 10 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும் என்று அதன் தலைவர் தெரிவித்தார். (ச)

## பரிசளிப்பு விழா

நவாலி, ஜன.26

நவாலி மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.மாதவன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம அதிதியாக வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நேசகுமாரி செல்வரட்ணமும், சிறப்புஅதிதியாகயாழ்ப்பாணம் வர்த்தக வங்கி ஓய்வுநிலை அதிகாரிஅல்பேர்ட்ஜெயரட்ணம் கதிர்காமரும், கௌரவ அதிதியாக அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் நவாலி மகாவித்தியாலயப் பழைய மாணவர் ப.செகரராஜசேகரனும் கலந்து கொள்வர். (இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ். சர்வதேசவர்த்தகக்கண்காட்சிக்கு இந்தியாவிலிருந்து வருகைதரும் 67 வர்த்தக மற்றும் தொழில் முயற்சியாளர்களுடன், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் தொழில் முயற்சியாளர்களை ஒன்றிணைத்து எதிர்காலத் தொழில் விஸ்தரிப்புத் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாட ஏற்பாடாகியுள்ளது.

இக்கலந்துரையாடல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். வர்த்தகத் தொழிற்றுறை மன்றத் தவிசாளர் கு.விக்னேஸ் அறிவித்துள்ளார். (இ)

## நாளை சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜன.26

வடமாகாணசுதேசமருத்துவத் திணைக்களமும், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவினரும் இணைந்து நடத்தும் முதலாவது தேசிய சுதேச மருத்துவ மாநாடும், கண்காட்சியும் - நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிறு வரை - மூன்று தினங்கள் - யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவில் இடம்பெறும். (ச)

## நிதி நிறுவனத்தில் கொள்ளை

கொழும்பு, ஜன.26

கல்கிஸை அத்திடிய பகுதியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் கல்கிஸை அத்திடியப் பகுதியில் உள்ள நிதி நிறுவனத்தில் பெருந்தொகையான பணத்தைக்கொள்ளையடித்துச்சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் கொள்ளையர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

காலைக்கதிர்
Kalaikkathir

## விரைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டிருக்கின்றமையை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். மூன்றாம் நாளாக அவர்கள் தண்ணீரோ, உணவையோ தன்னும் உள்ளெடுக்காமல் இருக்கின்றனர். விரைந்து ஏதேனும் நடவடிக்கை எடுக்காமல் விட்டால் சத்தியாக்கிரகிகளின் பெறுமதிமிக்க உயிர்களை நாம் இழக்க வேண்டி நேரிட்டுவிடும்.

இதுபோன்ற விடயங்களில் நான் தங்களுக்குக் கடிதங்களை எழுதுவது இது முதல் தடவையல்ல. முன்னரும் சில சந்தர்ப்பங்களில் உண்ணாவிரதம் இருப்போர் சார்பாக நான் உங்களுக்குக் கடிதம் எழுதினேன். நீங்களும் அது தொடர்பில் நடவடிக்கை எடுத்தீர்கள். ஆனால், நீண்ட காலத்தில் அதன் மூலம் திட்ட வட்டமாக எதுவும் கிட்டவேயில்லை.

எமது மக்களினதும் ஆதரவு மற்றும் வாக்குப்பலம் ஆகியவற்றுடனேயே தங்களின் அரசு அதிகாரத்துக்கு வந்தது. நீங்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அது தொடர்பில் அவர்கள் (எமது மக்கள்) குறிப்பிடத்தக்க எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் வாபஸ் பெறப்படும், அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்படும், காணாமற் போகச் செய்யப்பட்டோரின் தலைவிதியைக் கண்டறிவதற்கான விசாரணைகளுக்கு உடன் நடவடிக்கை எடுக்கப்ப டும் மற்றும் அது போன்ற பல விடயங்களை உங்கள் அரசு முன்னெடுக்கும் என ஊகிக்கப்பட்டது.

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் இப்போது வெறும் பெயரளவிலேயே உள்ளது. அதற்கு அதிகாரம் ஏதும் கிடையாது. அவர்களது விசாரணைக் குழு நியாயத்துடன் விசாரணைகளை ஆரம்பித்தால் கூட, இராணுவச் சந்தேக நபர்களுக்கு எதிராகப் பயன்தரு நடவடிக்கை எதையும் அதனால் எடுக்கவே முடியாது. அவர்கள் தங்கள் கருத்தை நீதிமன்றுக்கு அனுப்ப மட்டுமே முடியும். அதன் விளைவாக நீண்ட தாமதமே நேரிடும்.

உண்ணாவிரதம் இருப்போர் மிகப் பலவீனமானவர்கள். வயதானவர்கள். எதுவும் (அவர்களுக்கு) நேரலாம்.

பின்வருவனவற்றை நான் பிரேரிக்கிறேன்.

1. நீங்கள் ஒரு சிரேஷ்ட அமைச்சரை உடனே வவுனியாவுக்கு அனுப்பி சத்தியாக்கிரகிகளுக்கு ஏதேனும் வாக்குறுதிகளை வழங்குங்கள்.

2. காணாமற்போனோர் எங்கிருக்கின்றனர் என்பதைக் கண்டுபிடிப்பது தொடர்பில் சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஒரு கால வரையறையை ஏற்படுத்தல்.

3. சத்தியாக்கிரகம் இருக்கும் ஒரு பெண்மணி, தனது மகள் உங்களுக்குப் பக்கத்தில் நிற்கும் படத்தைத் தாங்கியவாறு உள்ளார். அந்த மகள் எங்கிருக்கின்றார் என்பதாவது உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டு, அந்த மகள் அவரின் தாயுடன் இணையக் கூடிய வகையில் விடுவிக்கப்பட வேண்டும்.

4. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வாபஸ் பெறப்பட்டால், பல அரசியல் கைதிகள் அதன் விளைவாகத் தானாகவே விடுவிக்கப்படுவர். ஆகவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் வாபஸ் பெறுவது உடன் நடக்க வேண்டும். எப்படியாயினும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படும் என்று உலகுக்கு பெரியளவில் அரசு உறுதிமொழி அளித்துத்தானே உள்ளது.

கேப்பாப்புலவில் இடம்பெயர்ந்தோர் தவிர்ந்த ஏனையோரின் காணிகளை விடுவிப்பதற்காக அவற்றைக் குறித்தொதுக்கும் நடவடிக்கை இராணுவத்தினரால் இன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியவந்திருக்கக்கூடும். இடம்பெயர்ந்தோர் தங்களின் நிலங்களுக்கு மீளச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சத்தியாக்கிரகிகள் தங்களின் உண்ணாவிரதத்தைத் தொடராமல் தவிர்க்கச் செய்வதற்கு அவர்களைத் திருப்திப்படுத்தி இணங்க வைக்கும் நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறு நான் வேண்டுகிறேன்.

அதில்தாமதிப்பதுஎங்கள்அனைவருக்குமே பாதகமானது.

உங்களின் மீது எமது மக்கள் மிக உயர்வாக வைத்திருந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அண்மைக் காலங்களில் சரிந்து வருகின்றன. அவர்களின் உணர்வுகள் அரசியல் காரணங்களாக மட்டுமல்லாமல், இனத்துவ மற்றும் மனிதாபிமான காரணங்களுக்காகவும் கவனத்தில் எடுங்கள். எங்கள் மக்களைக் கைவிட மாட்டீர்கள் என உறுதி கொள்கிறேன். - என்று உள்ளது.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

பிரதமர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

காணாமல்போனோர் தொடர்பில் தமக்குத் தெரிந்த தகவல்களை வழங்குவார் என பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். காணாமல்போனோர் தொடர்பில் எந்தவொரு தகவல்களையும் இங்கு தேடிக்கொள்ள முடியாமல் இருக்கின்றதென பொலிஸார் அறிவித்துள்ளனர். இங்குள்ளவர்கள் தொடர்பான தகவல்க்ளை தேடிக்கொள்ளலாம். ஆனால், அவர்கள் வெளிநாடு சென்றுள்ளார்களா என்பதற்குரியஎந்தவொருஆதாரமும் சட்டரீதியாகக் கிடையாது. சட்ட விரோதமாக அல்லது வேறு வழியாக அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றார்களா என்பது தெரியவில்லை.

காணாமல்போனோரில் சிலர் உயிருடன் இல்லை என்றே நான்நினைக்கின்றேன். எனவே, அவ்வாறானவர்களுக்கு வழங்க வேண்டிய நஷ்டஈடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து கொள்கை ரீதியான முடிவொன்றை எடுக்க வேண்டியுள்ளது. - என்றார். (ஓ)

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடம் தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை போராட்டக் களத்துக்கு வருகை தந்த பொலிஸார் படிவமொன்றில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவரங்களைத் திரட்டினர். இந்த உத்தரவு எங்கிருந்து பொலிஸாருக்குக் கிடைத்தது என்பது தெரியாத நிலையிலும் பொலிஸார் தகவலைச் சேகரிப்பதால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியிருந்த்னர். (ஓ)

# கரம்பன் கர்ப்பிணிப் பெண் படுகொலை; நாளை ஒரு மணிநேரம் கடையடைப்பு!

## துரித விசாரணையை வலியுறுத்தி அனந்தி அழைப்பு

வவுனியா, ஜனவரி 26

தமிழீழவிடுதலைப்புலிகளின் பின்னரான காலத்தில் வடக்கு கிழக்கில் உள்ள பெண்கள் பல்வேறு வன்முறைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளவடக்குமாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், ஊர்காவற்துறையில் கர்ப்பிணி பெண்ணொருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் விரைவான விசாரணையை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குமாறு கோரி நாளை வெள்ளிக்கிழமை ஒரு மணிநேர கதவடைப்பை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழவிடுதலைப்புலிகளின் 2009 இல் மௌனிப்பிற்கு பின் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுவதைத் தினம் தினம் நடைபெறும் குற்றச்செயல்கள் நிரூபணம் செய்கின்றன. இந்த அதிகரிப்புக்குக் காரணம் அரச இயந்திரம் சரியான நடவடிக்கை எடுக்காமையேஆகும்இலங்கை அரசின் காவற்துறை இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதாகத் தெரியவில்லை.

இன அழிப்பு ஒன்றை எதிர்நோக்கிய ஒரு சமூகம் மீண்டும் அதே போன்ற ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொள்கின்றதா என்ற சந்தேகம் இவ்வாறன தொடர் சம்பவங்கள் மூலம் ஏற்படுகின்றது. அரச இயந்திரம் வேண்டுமென்றே இவற்றைக் கட்டுப்படுத்தத் தயங்குகின்றதா என்ற கேள்வியும் எமக்கு எழுகின்றது.

கடந்த வருடம் கூட பாடசாலை மாணவி ஒருவர் புங்குடுதீவில் வைத்து கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார். இதற்கு முன்னர் காரைநகரிலும் கிளிநொச்சியிலும் சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

தமிழ்ச் சமூகம் என்றுமே எதிர்கொண்டிராத சமூக விரோதக் குற்றசெயல்களைத்தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னரான காலத்தில் எதிர்கொண்டு வருகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸாரும் மௌனம் சாதித்து வருகின்றனர். இந்த நிலையில் தமிழினம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன் முறைகள், பாலியல் வன்கொடுமைகளைக் கண்டித்து நாளை காலை 9 தொடக்கம் 10 மணி வரையான ஒரு மணிநேர பணிப்புறக்கணிப்பும். கதவடைப்பும் மேற்கொள்ளுமாறு அனைத்து அரச, அரசசார்பற்ற, தனியார்துறைகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

வித்தியாவினுடைய படுகொலைத் தீர்ப்பு வெளிவர வில்லை. அதன் பின்னர் கிளிநொச்சி, காரைநகர் மாணவிகள் மரணம். நேற்றைய தினம் ஏழு மாத கர்ப்பிணித் தாயின் படுகொலை. இதுதவிர வெளியே தெரியப்படுத்தப்படாத பல பாலியல்வன்கொடுமைகள்என்பவற்றுக்கு எதிராக நாம் போராட வேண்டிய நிலையில் சமூகப் பொறுப்புள்ள அனைத்து பிரஜைகளும்தங்களின் ஆதரவை வெள்ளிக்கிழமை ஒருமணிநேர பணிப் புறக்கணிப்பையும் கதவடைப்பையும் மேற்கொண்டு, அதன் மூலம் வெளிப்படுத்தி, பெண்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள் - என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## 4 ஆம் நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களின்உறவினர்கள்14பேருக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் அரசியல் கைதிகளின் தாய்மார் இருவர் நேற்று இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொண்டனர்.

பகல் வேளைகளில் பலரும் சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஆதரவாக இருந்த போதும் இரவில் உறவினர்கள் மட்டுமே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தமக்கான உரிய பதிலை அரசு வழங்காத பட்சத்தில் தாம் இறப்பதற்கும் தயாராக உள்ளனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று வவுனியாவில் உள்ள இளைஞர்கள் ஒன்று கூடி உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அடுத்தகட்டம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்மால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் அனைத்தும் நிபந்தனைகள் இன்றி நிறைவேற்றப்படும் வரை சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

விசேட பண்டிகை நாள்களில் சிறு குற்றங்களில் ஈடுபடும் கைதிகளுக்குப் பொது மன் னிப்பு வழங்கி விடுதலை செய் யும் அரசு நீண்டகாலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை ஏன் விடுதலை செய்யவில்லை எனவும் அவர்கள் கேள்வியெழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வடமாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, வடமாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ப.சத்தியசீலன், சிறிரெலோ கட்சியின் இளைஞர் அணித்தலைவர் ப.கார்த்தீபன், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் செபமாலை அடிகளார், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் கருணதாச ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடி யிருந்தனர். (100)

# 500 ரூபா போலி நாணயத்தாள் தயாரித்த கும்பல் அகப்பட்டது!

## 400 நோட்டுக்களுடன் மூவர் கைது



500 ரூபா போலி நாணயத்தாள்களை வாகனமொன்றில் கொண்டுசென்றபெண்ணொருவர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 500ரூபா போலி நாணயத்தாள்கள் நானூறு மற்றும் போலி நாணயத்தாள்களை அச்சடிப்பதற்காகப் பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தல பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து புத்தல ரஜ மாவத்தையினூடாகச் சென்ற கப் ரக வாகனத்தை மறித்துச் சோதனையிட்ட பொலிஸார் போலி நாணயத்தாள்களைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபர்கள் மூவரையும் கைதுசெய்துள்ளனர். இதன்போது சுமார் 2லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து போலி நாணயத்தாள்களை அச்சடிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கணினி, அச்சியந்திரம் உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தலரஜமாவத்தையிலுள்ள வீடொன்றில் வைத்தே போலி நாணயத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் மூவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ)

## உண்ணாவிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தியசாலையின் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த வைத்தியர் குழு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களைப் பரிசோதனை செய்ததன் பின்னரே வைத்தியர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வயோதிபத் தாய்மார் இருவரின் உடலில் சீனியின் அளவு மிகக் குறைவடைந்துள்ளது எனவும் இருவரும் மயக்கமுறும் நிலையில் உள்ளனர் என்றும் வைத்தியர் தெரிவித்தார்.

அந்த வயோதிபத் தாய்மார் மயக்கமுறும் சந்தர்ப்பத்தில் அவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஓ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.